# 35 பீடி கம்பனிகளை ஆறு மாதத்தில் மூடி விட்டு

Registered as a News Paper in Ceylon   விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE BELANADU


National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 265
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 18 ரமழான் 4 புதன்கிழமை (4-11-70)

அண்ணா கோப்பி




பிளாஸ்டிக் கப்பில் அடைக்கப் பெற்ற அண்ணா கோப்பியை வாங்கி அதிக லாபம் அடையுங்கள் வெற்றுக் "கப்களை" சேகரித்து அனுப்பி

பெறுமதிவாய்ந்த பரிசுகளைப்பெறுங்கள்

# வெளியேற வேண்டும்!

— பெரி. சுந்தரலிங்கம் —

கொழும்பு, செவ்வாய்

**இலங்கையரல்லாதவருக்குச் சொந்தமான 35பீடிக்கம்பனிகளும் 6மாதத்தில் மூடப்படவேண்டுமென்றும், மூடியபின்னர் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டுமென்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளளது.**

பிரதமரின் இந்த உத்தரவை உதவி பாதுகாப்பு அமைச்சர் திரு. லஷ்மன் ஜெயக்கொடி இன்று அறிவித்தார்.

உதவி பாதுகாப்பு அமைச்சர் கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் பிரதமரின் மற்றும் பல தீர்மானங்களை வெளியிட்டனர்.

1949-ம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் இந்திய பாஸ்போட் பெற்ற 10,000 பேர் விசாவோ, தற்காலிக வாசபர்மிட்டோ இல்லாமலிருக்கிறார்கள் இவர்கள் தற்காலிக வாசபர்மிட்எடுப்பதற்கு சட்டம் கொண்டுவரப்படும். இதன் மூலம் வருடமொன்றுக்கு 500 ரூபா வரியை இவர்கள் கட்டவேண்டி ஏற்படும்

நேரு கொத்தலாவலை ஒப்பந்தப்படி, அந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இந்திய பாஸ்போர்ட் பெற்றவர்கள், 55 வயது அடையும்வரை அவர்கள் இலங்கையில் இருக்க வசதி செய்யப்படுமென்று முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் புதிதாக கொண்டுவரப்படும் சட்டம் இந்த ஒப்பந்தத்தை ஒருமுகமாகப் பாதிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கை பிரஜாவுரிமைக்கு மனுப்போட்டவர்களை இந்தப் புதிய திட்டம் மட்டுப்படுத்தாது என்று தெரிகிறது.

கள் இறக்கும் தொழிலாளர் 706 பேர் விரைவில் நட்டைவிட்டு வெளியேற்றப்படவுள்ளனர், இவர்களில் 3,000 பேர் இருந்தார்கள்.

புதிய உத்தரவு இந்தியர்களையே கூடுதலாக பாதித்துள்ளது தேயிலைத் தோட்டங்களில் ஐரோப்பியர் 5,000 பேர் முன்னர் இருந்தார்கள், இப்போது 91 ஐரோப்பியரே உள்ளனர்.

## 50, 100 ரூபாய்

# பழைய நோட்டுக்கள் நவ. 15வரை மட்டுமே வங்கிகளில் போடலாம்

கோட்டை, புதன்

**பழைய 50, 100 ரூபா நோட்டுக்களை வங்கியில் 'டிப்போசிட்' செய்யும் கடைசித் தினம் இம்மாதம் 15-ந் திகதி வரை, குறைக்கப்பட்டுள்ளது. 25-ம் திகதி வரை வங்கியில் செலுத்தலாம் என்று ஏற்கனவே அரசாங்கம் அறிவித்த திகதியில் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.**

நேற்றுத் தொடக்கம் பழைய 50, 100 ரூபா நோட்டுகள் சட்டப்படி செல்லுபடியாகாது. வர்த்தக ரீதியாகவும் பயன்படுத்த முடியாது. ஆயினும் இந்த நோட்டுக்களை வைத்திருப்பவர்கள் வங்கியில் அல்லது தபாற்கந்தோர் சேமிப்புக் கணக்கில் போடலாம். பணம் போட்டவர்களின் விபரங்கள் வருமான வரி இலாகாவுக்கு அறிவிக்கப்பட்டு பணச் சொந்தக்காரர்வருமானவரிசெலுத்த வேண்டியவர்கள் அல்ல என்று கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் வங்கியில் செலுத்தப்பட்ட முழுத்தொகையையும் மாற்றி, புதிய நோட்டுக்கள் வழங்கப்படும் என்று நிதிஅமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா நேற்று அறிவித்தார், வைப்புக்கணக்கில் வைக்க விரும்பாதவர்கள் சேமிப்புக்கணக்கில் இந்த நோட்டுக்களைப் போடலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## ரஷ்ய – இலங்கை வர்த்தக ஒப்பந்தம்

### மாஸ்கோவில் கைச்சாத்தானது

மாஸ்கோ, நவ. 3

இலங்கையும் சோவியத் யூனியனும் புதிய வர்த்தக ஒப்பந்தமொன்றில் இன்று கைச்சாத்திட்டன. இலங்கையின் சார்பில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவும் சோவியத் யூனியன் சார்பில் சோவியத் வர்த்தக அமைச்சர் திரு. மைக்கல் குஸ்நோவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின்படி சோவியத்யூனியனிடமிருந்துஇயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள், சிமெந்து சீனி ஆகிய பொருள்களைவாங்கும் இலங்கையிடமிருந்து ரப்பர், தேயிலை, தேங்காய்எண்ணெய், கொப்பரா, டப்பாக்களில் அடைக்கப்பட்ட பழங்கள், காலணிகள் ஆகிய பொருள்களை சோவியத்யூனியன்வாங்கும்.

## மாவட்டரீதியில் நியமனங்கள்

கோட்டை, செவ்

அரசாங்க சேவைகளிலும் கூட்டுத் தாபனங்களிலும் வேலைகளுக்கு ஆட்களை நியமிக்கும்பொழுது மாவட்ட அடிப்படையில் நியமனம் வழங்குவதென மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

இவ்வாறு மாவட்ட ரீதியில் நியமனம் வழங்குவதன் மூலம் ஒவ்வொருமாவட்டத்திற்கும் சமமான வேலை வாய்ப்பளிப்பதாக அமையும் என மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

அரசாங்க சேவையில் 28000 வெற்றிடங்களும் கூட்டுத்தாபனங்களில் 7000 வெற்றிடங்களும் இருப்ப

## இலங்கையரல்லாத 1500 பேரின் வர்த்தக லைசென்ஸ் ரத்தாகும்!

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் வாழ்ந்து வரும் 15000 வெளிநாட்டவரின் வர்த்தக லைசென்சுகள் ரத்துச்செய்யப்படும் உதவி பாதுகாப்பு அமைச்சர் திரு. லஷ்மன் ஜெயக்கொடி இன்று பிரதமரின் இந்த உத்தரவை வெளியிட்டார்

இலங்கையில் வாழ்ந்து வரும்வெளிநாட்டவர் 1500 பேரின் வர்த்தக லைசென்களை ரத்துச் செய்யுமாறு உத்தரவிடப் பட்டுள்ளதாம் இவ்வெளிநாட்டவர்கள் வெளியேற்றப்படுவதினால் 335 லட்சம் ரூபா வெளிநாடுகளுக்குஅனுப்பவேண்டி ஏற்படும் இருந்தபோதிலும் இந்நடவடிக்கையினால் இலங்கைமக்கள் எதிர்காலத்தில் பெருநன்மைகளை அடைவார்கள் என திரு. ஜெயக்கொடி தெரிவித்தார்.

வடுக்கு 100 பேர்

செய்ய முடியாது, இதற்கான மசோதா மிகவிரைவில் பிரதிநிகள் சபையில் சமர்ப்பிக்கப்படும், இனிமேல் இலங்கையரல்லாதவர்கள் இலங்கையில் வாழ்வதற்குரிய விசா பெறும்பொழுது ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். இவ்வித நடவடிக்கைக்குரியதாக குடியேற்ற வெளியேற்றப் பாதுகாப்புச் சட்டத்தில் சரத்து இல்லை. எனவே இதற்கான முறையில் குடியேற்ற வெளியேற்ற பாதுகாப்புச் சட்டம் திருத்தியமைப்பதற்கான மசோதா ஒன்றை அரசாங்கம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.

இக் கொள்கைகளினால் இலங்கையில் வாழும் ஏறக்குறைய 10 ஆயிரம் இந்திய பாஸ்போட் வைத்திருக்கும் வர்த்தகர், கைத்தொழிலா

## இ. போ. ச. பிரதிநிதிகளை

## நிச்சயம் பணம்

## பிரதமரை அழைக்க தீர்மானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதி வர்த்தக அமைச்சர் திரு. மைக்கல் குஸ்நோவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்கள் ஆகிய பொருள்களை சோவியத்யூனியன் வாங்கும்.

யும் என மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

அரசாங்க சேவையில் 28000 வெற்றிடங்களும் கூட்டுத்தாபனங்களில் 7000 வெற்றிடங்களும் இருப்பதாகத்தெரியவருகிறது. இவ் வெற்றிடங்கள் யாவும் மாவட்ட ரீதியிலேயே நிரப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

செமிப்புக் கணக்கில் போடலாம். பணம் போட்டவர் நோட்டுக்கள் வழங்கப்படும் என்று நிதிஅமைச்சர் டாக்

# இ. போ. ச. பிரதிநிதிகளை கொழும்புக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், புதன்

அண்மையில் யாழ். பஸ் நிலையத்தில் நடைபெற்ற கைகலப்பு சம்பந்தமாகவும் வேலை நிறுத்தம் சம்பந்தமாகவும் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக வடபகுதி இ போ ச ஊழியர் மன்றப் பிரதிநிதிகளை இ. போ. ச. தலைவர் கொழும்புக்கு அழைத்துள்ளார்.

பொறியியல் உதவிஅதிகாரி திரு. ஜெயசிங்கம் திரு. சங்கரலிங்கம், திரு. நாகராசா, திரு. குமாரகுலசிங்கம் கொண்ட குழு இ போ ச தலைவர் திரு, அனில்முனசிங்காவைச் சந்திப்பதற்காக நேற்றுக் கொழும்புக்கு புறப்பட்டுச் சென்றது.

## மரம் நாட்டு விழா

வேலணை, செவ்வாய்

வேலணை கலைமகள் இளைஞர் விவசாயக்கழகம் விரைவில் மரம்நாட்டு விழா கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளது.

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'சபை முடிவின்படி இரண்டாவது கேள்விக்காரருக்கு எழுதினேன்'

## மனுதார் ரஹீம் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

'மாட்டிறைச்சிக் கடைகளில் 1-ம், 2-ம் கடைகள் கூடுதலாகக் கேள்வி கேட்டவர்களுக்கு கொடுக்கப்பட்டது. 3-வது கடை கூடுதலாகக் கேள்வி கேட்டவருக்குக் கொடுக்கப்படவில்லை. இது நியாயமற்றதும், சட்டவிரோதமானதென்றும்மேற்படி தலைவர் கூறியுள்ள நியாயம் சரியாயிருப்பின் கூடுதலாகக் கேள்விகேட்ட சம்சுதீன் தகுதியல்லவரென்றால் கேள்விப்பத்திரம் வழங்கியிருக்கக்கூடாது. தலைவரே கேள்விப்பத்திரம் வழங்கியுள்ளார், சம்சுதீனுக்கு நியாயம் வழங்கப்படவில்லை ஏன்? அதனால் ஏற்படக்கூடும் கஷ்டநஷ்டங்களுக்கு நான் பொறுப்பாளியல்லவென்று இப்பிரேரணையைக் கொண்டுவருகிறேன் என்று கா. வைத்திலிங்கம் கூறினார், இதனை அ இ பிரான்சிஸ் ஆதரித்தார்.

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பட்டணசபை அறிக்கையிலுள்ள மேற்கண்ட விபரத்தை சாட்சியமளித்த மனுதாரரான ரஹீம் தெரிவித்தார்.

எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வக்கேட் ஏச் டபிள்யு தம்பையா குறுக்கு விசாரணை செய்தபோது சாட்சியமளித்த ரஹீம் 26-10-69-ல் நடந்தபொதுக் கூட்டத்தின் 8-வது தீர்மானத்தின்படி கேள்விக்காரர்களில் கூடுதலாகக் கேட்பவர்களுக்கு கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டதாகும் என்றும் அப்பிரேரணையில் கூறப்பட்டிருந்ததென்றும் தெரிவித்தார்.

ரஹீம் மேலும் கூறியதாவது:-

சம்சுதீனின் கேள்விப்பத்திரத்தை நிராகரித்து இரண்டாவது கேள்விக்காரருக்கு முதலாவது கேள்விக்காரரின் தொகையைக்கட்ட சம்மதமா என ஆலோசிக்க ஒருவாரகால அவகாசம் கொடுக்கவேண்டும் என்றேன் எனது தீர்மானம் 2 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேறியது. தலைவரின் தீர்மானத்தை உபதலைவர், அல்பர்ட், காசிம் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்.

வழ: சம்சுதீன் தகுதியற்றவரென அறிந்துகொண்டீரா? -ஆம்

வழ: அவருக்கு எழுதினீரா? -இல்லை

வழ: அவரை அழைத்து விசாரித்தீரா? -இல்லை

வழ: அடுத்த கூட்டத்தில் கடந்த கூட்ட அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது? -ஆம்

வழ: கேள்வி கேட்பவர் தகுதியுடையவராக இருக்க வேண்டுமா? -அவர் மாட்டிறைச்சி விற்பவராக இருக்கவேண்டும்

வழ: சம்சுதீன் ஆடுமாடு வியாபாரத்தில் தொடர்புடையவரெனத் தெரியுமா? -தெரியாது

வழ: கடைகளுக்கு அவர் மாடு ஆடு கொடுப்பது தெரியுமா? தெரியாது

வழ: கொழும்பிற்கு அவர் மாடு, ஆடுகளை ஏற்றுமதி செய்வது தெரியுமா?- தெரியாது

வழ: கேள்விப்பத்திரம் யாருக்கும் கிடைக்கும்?-ஆம்

வழ: சபை முடிவின்படி இரண்டாவது கேள்விக்காரருக்கு எழுதினீர்?- ஆம்

வழ: முதலாவது கேள்விக்காரரின் தொகையை ஏற்பீரா என எழுதினீர்? -ஆம்

வழ: நீர் எழுதிய கடிதத்திற்கு அவர் சம்மதித்தார்? -ஆம்

வழ: இரண்டாவது கேள்விக்காரரின் கட்டுப்பணத்தை ஏற்றுக்கொள்ளும்படி சபையின் செயலாளருக்கு தெரிவித்தீர்? -ஆம்

மனுதாரானரஹீம் நேற்று நண்பகல்வரை எதிர்மனுதாரின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் மன்னார் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினராக திரு. வி. ஏ. அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து யு என் பி அபேட்சகராகப் போட்டியிட்ட மன்னார் பட்டின சபைத் தலைவர் ரஹீம் மனு தாக்கல் செய்திருந்தார். இம்மனு மீதான விசாரணை யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோரம் முன்னிலையில் நடைபெற்று வருகிறது விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# நிச்சயம் பணம் திரும்பக்கிடைக்கும்

வங்கியில் அல்லது தபாற்கந்தோர் சேமிப்புக் கணக்கில் போடப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்படும் என்றோ அல்லது பணத்தின் பெறுமதி குறைக்கப்படும் என்றோ எவரும் அஞ்ச வேண்டியதில்லை. பணம் போட்டவர்கள் வருமான வரிசெலுத்தவேண்டியவர்களாயின் வருமானவரி பாக்கியின்றிச் செலுத்தப்பட்டுள்ளதா என்ற புலன் விசாரணை முடிவடைந்ததும் பணம் திரும்ப வழங்கப்படும். பணத்தின் பெறுமதி குறைக்கப்பட மாட்டாது என்று நிதிஅமைச்சர் உறுதியளித்துள்ளார்.

வருமானவரி செலுத்த வேண்டியவர்களிடம், வருமானவரிப் பாக்கிப்பணம் மட்டுமே அறவிடப்படும் என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார். மிகுதிப்பணம் பணச் சொந்தக்காரரிடம் புதிய நோட்டுக்களாகத் திரும்ப வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பழைய நோட்டுக்களை வைத்திருப்பவர்கள் இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் வங்கியில் போட்டுவிட வேண்டும். இதன் பின்னர் பழைய நோட்டுக்களை வங்கியிலோ அல்லது தபாற்கந்தோர் சேமிப்பிலோ போட முடியாது.

# அடுத்த ஆண்டில் பாடசாலைகள் இணைப்பு?

பருத்தித்துறை, செவ்வாய்

சிறியபாடசாலைகள் அவற்றுக்கு அண்மையிலுள்ள மகா வித்தியாலயங்களுடன் அடுத்த ஆண்டிலிருந்து இணைக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது

மகா வித்தியாலயங்களில் அடுத்த ஆண்டு தொடக்கம் 8-ம் வகுப்பு இருக்கமுடியாதென்ற கல்வியமைச்சின் சுற்றறிக்கையாலேற்பட்டுள்ள விளைவுகளைத் தவிர்க்கு முகமாக, ஒவ்வொரு மகா வித்தியாலயத்திற்கும் அண்மையிலுமுள்ள சிறிய பாடசாலைகளை அம்மகாவித்தியாலயத்துடன் இணைந்து நடத்துவதற்கான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. மகா வித்தியாலயம் ஓர் அதிபரின் நிர்வாகத்திலும் சிறிய பாடசாலை ஒரு தலைமையாசிரியரின் தலைமையின் கீழும் இயங்குமென்றும் இருந்த போதிலும் இரு பாடசாலைகளும் ஒரு பாடசாலையாகவே கணிக்கப்படுமென்றும் தெரிகிறது.

சில இடங்களில் ஒரு பாடசாலையில் உள்ள ஆசிரியர் குறிப்பிட்ட சில பாடங்களுக்கு மற்றப் பாடசாலையிலும் கடமையாற்றலாமெனவும் தெரிகிறது.

## முன்னாள் அமைச்சர் ஒருவர்

# நாலரை லட்சம் ரூபாவை வங்கியில் போட்டாராம்!

கோட்டை, செவ்.

இம்மாதம் முதலாம் திகதி முன்னாள் அமைச்சர் ஒருவர் சிங்கள வாராந்தரப்பத்திரிகையின் வைப்புக்கணக்கில் 4 லட்சத்து 39 ஆயிரத்து 750 ரூபாவைக் கணக்கு வைத்துள்ளார் என்ற தகவலை கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்சா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்,

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் திரு. ராஜபக்சா பேசுகையில் இதைக் குறிப்பிட்டார். நாணயப் பதுக்கல்காரர்கள் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் கூறினார்.

குறிப்பிட்ட சிங்கள வாராந்தரப்பத்திரிகையின் விநியோகம் 5000 பிரதிகளுக்குக் குறையத்தான் என்று கூறிய அவர் நாளாந்தம் 4500 ரூபா மட்டுமே இந்த ஸ்தாபனத்தார் வங்கியில் போட முடியும் என்றும் சொன்னார். திடீரென இத்தொகை எப்படி வந்தது என்பது பற்றி ஆராயப்பட வேண்டுமென்று அமைச்சர் கூறினார்.

# பிரதமரை அழைக்க தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

கைதடியில் நிறுவப்படும் ஆயுர்வேத கல்லூரியையும் ஆஸ்பத்திரியையும் திறந்து வைக்கும்படி பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவை கோருவதென சாவகச்சேரி சுதந்திரக் கட்சிக்கிளை நேற்று தீர்மானத்துள்ளது,

கிளைத்தலைவர் திரு, எஸ், பரமானந்தம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆயுர்வேத கல்லூரியின் திறப்பு விழாவிற்கு சுகாதாரமந்திரியைதலைமை தாங்க அழைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சாவகச்சேரி தொகுதி சுதந்திரக்கட்சி அவைப்பாளர் திரு. இராமலிங்கம் இத் திறப்பு விழாவிற்கு மற்றும் சில மந்திரிகளையும் அழைக்க வேண்டுமென்று கூறினார்.

இக்கூட்டத்தில் மன்னார் தொகுதி சுதந்திரக்கட்சி அமைப்பாளர். திரு. என். எஸ். ஏ. காதரும் கலந்து கொண்டார்.

பிரதமர் வடபகுதிக்குவிஜயம்செய்யும்போது சாவகச்சேரி மத்திய கமிட்டி சார்பில் வரவேற்பளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

# 'கி. சபைகளுக்கு வருமானம் அதிகரிக்க வழி'

முசலி, செவ்வாய்

கிராமசபைகள்சில போதியளவு வருமானம் இல்லாத காரணத்தால் தங்கள் கிராமச்சபை எல்லைக்குள் ஒரு செயப்படு திட்டத்தையும் தனித்து செய்யமுடியாத நிலைமை ஏற்படுகின்றது தற்பொழுது மத்திய அரசாங்கத்தால் அறவிடப்படும் சாராயத் தவறணை குத்தகை கள்ளுத்தவறணை குத்தகைமோட்டார்வாகன லைசென்ஸ் வரி, மீன்பிடி படகு லைசென்ஸ் ஆகியனவை உள்ளூராட்சி ஸ்தாபனங்களாகிய கிராமசபைகளினால் அறிவிடப்பட்டால் இத்தாபனங்களின் வருமானம் முன்னேற்றமடையும் இந்த வருமானத்தைக் கொண்டு தங்கள் கிராம சபை எல்லைக்குள் முன்னேற்றமான திட்டங்களைச் செய்யலாம் இவ்வாறு வங்காலை கிராமசபை அக்கிராசனர் திரு. இம்மனுவல் குரூசும் தலைமன்னார் கிராம சபை அக்கிராசனர் திரு. எஸ். வெலிச்சேர்பீரிசும் மன்னார் மாவட்டஇணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தனர்.

இந்நடவடிக்கையினால் இலங்கைமக்கள் எதிர்காலததில் பெருநன்மைகளை அடைவார்கள் என திரு. ஜெயக்கொடி தெரிவித்தார்.

## அடுத்து 1000 பேர் விரைவில்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- இந்த 1500 வர்த்தகர்களை வெளியே அனுப்புவதை அடுத்துபிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் 1000பேர்அடுத்து மிகவிரைவில் அனுப்பப்படுவார்கள்.

இலங்கை மக்கள் இங்கு வேலையின்றி கஷ்டப்படுகிறார்கள். இந்நிலையில் இலங்கையருக்கே இலங்கையில் வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் இனிமேல் இலங்கையரல்லாத வெளிநாட்டவர் வேலை அனுமதிப்பத்திரமின்றி இலங்கையில் எந்த ஸ்தாபனத்திலும் வேலை சமர்ப்பிக்கும்.

இக் கொள்கைகளினால் இலங்கையில் வாழும் ஏறக்குறைய 10 ஆயிரம் இந்திய பாஸ்போட் வைத்திருக்கும் வர்த்தகர், கைத்தொழிலாளர்களை தாக்கும் போல் தெரிகிறது.

இந்த 10 ஆயிரம் பேரை விட 3 ஆயிரம் வெளிநாட்டவர்கள் வாழ்கின்றார்கள், இந்தச் சின்னஞ்சிறிய நாட்டில் இவ்வளவு பெரிய தொகை வெளிநாட்டவரை வைத்திருப்பது நாட்டுக்கு நல்லதல்ல'

இந்த வெளிநாட்டவர்கள் வர்த்தக நாணயப்பரிவர்த்தனையில் ஈடுபடுகின்றார்கள் எனத் தெரியவருகின்றது, இவர்களுடைய இவ்வித சட்டவிரோதச் செயல்களை நிறுத்துவதற்கு அரசாங்கம் வழிவகுக்கும்.

(சி பி ஏ)

# சோஷலிச நாடுகளிலிருந்து ஜவுளி இறக்குமதி

கோட்டை, செவ்.

அடுத்தாண்டு முதல் நாட்டுக்குத் தேவையான ஜவுளி வகைகளை சோஷலிஸ நாடுகளிடம் இருந்து மட்டுமே இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

1971-ம் ஆண்டிலிருந்து இறக்குமதியில் ஏகபோக வுரிமையுடையதாகவிருக்கும் என்றும் அறிவித்தது. லங்கா சலுசலா ஜவுளிகளை பெறுவதற்கு சோஷலிச நாடுகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

# 'பொருளாதார விருத்திக்கு குடிசைக்கைத் தொழில்'

## திரு. ஜெக்கொடி எம். பி. அறிவுரை

பருத்தித்துறை, செவ்.

"நமது கிராமங்களில் நெசவு போன்ற குடிசைக் கைத்தொழில்களை சுயமுயற்சியடிப்படையில் ஆரம்பித்து நடத்துவதன் மூலம் நமது பொருளாதாரத்தை வளர்க்கமுடிவதுடன் ஓரளவாவது பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைக்கலாம் வெள்ளை உடை உத்தியோகங்களை நம்பியிருக்காது நமது வாலிபர் குடியேற்றத் திட்டங்களுக்குச் சென்று அங்கு விவசாயம் செய்வதன்மூலம் எமது தமிழ் பிரதேசத்தை வளப்படுத்தி வளரும் சந்ததியினரின் சுபிட்சவாழ்விற்கு வழிவகுப்பதுடன் இப்பிரதசங்களைத் தமிழர் காலப்போக்கில் இழக்காதும் பாதுகாக்கலாம்."

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதி ஆட்சிமன்றஉறுப்பினர் திரு. க ஜெயக்கொடி கட்டைவேலி தமிழரசு வாலிப முன்னணியின் ஆதரவில் நடந்த கூட்டமொன்றின் பேசும் போது கூறிப்பிட்டார் திரு. எஸ். முத்துலிங்கம் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

கரவைகிழார் உட்படப் பலர் இக்கூட்டத்தில் பேசினர்.

......

## ஹட்டனில் நடமாடும் வங்கி

கோட்டை, புதன்

ஹட்டன் தேசிய வங்கியின் நடமாடும் சேமிப்பு வங்கிகள் சேவை நேற்று ஆரம்பமானது.

நேற்றுக்காலை நிதியமைச்சர் டாக்டர் என். எம் பெரேரா மேற்படி சேவையை ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

வட்டிக்கு ரூபா 4000/- மிக அவசரமாகத் தேவை. விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 2388, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2388

### விற்பனைக்கு

நக்ரர்! 135, வெகுசன் மொடல் இலக்கம் 25 சிறி 2269, தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி E. S. K. யுவலறி, 82/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2393

வீடு வளவு! கீழ்க்காணும் விலாசத்தையுடைய 4 1/2 பரப்புக் காணி மின்சார வசதி கொண்ட வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு எஸ். கனகரெட்ணம், 36/2, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். 2391

### கல்வி

வகுப்புகள்

ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் சிங்களம் முதலிய பாடங்களும் கீழ் குறிப்பிடும் வாத்திய இசைகளும் கற்றுக் கொடுக்கப்படும். வயலின், பியானு, ருத்திர வீணை, எக்கோடியன், ஆர்மோனியம், மிருதங்கம் ஜலதரங்கம், தபேலா, மோர்சிங், கெஞ்சிரா, கடம், தேவாரம் (பண்முறையில்) கற்க வசதியுண்டு. க. சோமசுந்தரம், துரைவாசா, மெயின்வீதி பண்ணாகம், சுழிபுரம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 2392

## மத்திய கல்லூரி சாம்பியன்

ஏறூவூர், திங்கள்

மட்டக்களப்பு மைக்கல் கல்லூரிக் கோஷ்டிக்கும் வந்தாறு மூலை மத்தியகல்லூரி கோஷ்டிக்கு மிடையிலான சம்பியன் தெரிவுக்குரிய உதை பந்தாட்டப்போட்டி மட்டக்களப்பு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. வந்தாறுமூலை மத்திய கல்லூரி சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது இப்போட்டி 15 வயதிற்குட்பட்ட பிரிவுகளுக்கிடையே இடம் பெற்றது.

## விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டின சபை

கிளிநொச்சிப் பட்டின சபைக்கு ஒரு முத்திரைச் சின்னம் அமைத்துக்கொள்வதற்காக அபிப்பிராயம் கோரப்படுகிறது விரும்புவோர் அதனைப் படமாக வரைந்து கருத்துக்களையும் எழுதிச் ''சீல்'' வைத்த உறையுள் வைத்து 19-11-70 முற்பகல் 10-00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குக.

கிளிநொச்சிப் பட்டினத்தோடு தொடர்பானதும், பொருத்தமானதுமான சிறந்த கருத்தோடு அனுப்பப்படும் படத்திற்கு ரூபா 25/- சன்மானமாக வழங்கப்படும்.

ச. சு. முருகேசு,
தலைவர்,
பட்டினசபை,
கிளிநொச்சி.

பட்டினசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
1-11-70. 2540

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வாத்தியஇசை.

இரவு 6-15 கிராமியப் பாடல், 6-30நாட்டுப்பாடல்கள், 7-00 திரைகானம், 7-15நாடகம், 7-45 மெல்லிசை 8-00முஸ்லிம்நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## மைக்கல் கல்லூரி சம்பியனானது

ஏறூவூர், செவ்வாய்

மட்டக்களப்பு அர்ச் மைக்கல் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், மட்டக்களப்பு மத்திய கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே மட்டக்களப்பு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சம்பியன் போட்டியில் மைக்கல் கல்லூரி மத்திய கல்லூரியை 3—0 கோல்களால் தோற்கடித்தது.

17 வயதிற்குட்பட்ட போட்டியிலும் அர்ச் மைக்கல் கல்லூரி கோஷ்டி மத்திய கல்லூரி கோஷ்டியைத் தோற்கடித்து சம்பியனாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

## நெல் விதைப்பு

கிளிநொச்சி, செவ்வாய்

காலங்கடந்த பின்பும் இப்பகுதி விவசாயிகள் நெல்லை விதைத்துவிடுகிறார்கள். பெரும்பாலான வயல்களில் சேற்றுழவு நடைபெறுகிறது. புத்துவெட்டுவான் பகுதியிலுள்ள அநேக உழவர்கள் தற்போது சேறடித்து விதைத்து வருகின்றனர்.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 18-ந் திகதி

(4-11-70)

மேஷம்- மக்களால் மகிழ்ச்சி. மனம்நிறைந்த வாழ்வு புதுமையில் நாட்டம். புதுப் பொலிவுமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

ரிஷிபம்- வட்டமிடும் கழுகுப் பார்வை. உங்களை மிரட்டப் பார்க்கும். பிரயாணத்தின்போது பொருள் நழுவக்கூடும்!

மிதுனம்- பொய்க்கோபம் காட்டிய ஒருவர் இன்று உம்முடன் இணைந்து வருவதற்கு முற்படுவார். வாழ்க்கையில் வசந்தம் நிலவும்

கடகம்- அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவும் உண்டு. வீண்செலவு வேண்டாம் விபரீதம் விளைந்திடும்.

சிங்கம்- உடம்பை அலட்டிக் கொள்ளாமலேயே உயர்வுக்கு வழிகாண்பீர்கள், மேலிடத்து உறவு உற்சாகத்தை அளிக்கும்.

கன்னி- உத்தியோக உயர்வுக்கு இடமுண்டு சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்புக்கு இடமுண்டு. தெய்வத்தின் துணையும் உண்டு

துலாம்- இலாபகரமான தினம். பொருள்வரவுக்குத்

# வரி மன்னிப்பு கிடைக்கும்!

## உண்மையான வருமான விபரம் தருமாறு அரசு வேண்டுகோள்

பழைய 100, 50 ரூபா நோட்டுக்களை வைத்திருப்பவர்கள் இவற்றை இம்மாதம் 3-ம் திகதி தொடக்கம் 25-ந் திகதி வரை வங்கிகளில் 'டிப்போசிட்' செய்யவேண்டும். தங்களிடமுள்ள பணத்தின் தொகையையும், உண்மையான வருமானத்தையும் வெளிப்படுத்துவோருக்கு வரி மன்னிப்பளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. இம்மன்னிப்பைப் பயன்படுத்தும் ஒருவர் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் என்ன? யாருடன் தொடர்புகொள்வது? எவ்வாறு வெளிப்படுத்துவது என்பன பற்றிய விபரங்கள் இங்கு தரப்படுகின்றன. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இத்தகவல்களைத் தந்துள்ளது.

### மன்னிப்பின் தன்மை

ஒருவர் சரியாகத் தனது வருமானத்தை வெளிப்படுத்தி அன்னார் வரி மதிப்புக்கு உட்படுத்தப்படா விடத்து, அவரிடமிருந்து பெறப்படும் பிரகடனத்தின் கீழ், அவரிடமுள்ள திரட்டிய பணம் அல்லது இலாபம் போன்ற முதலீட்டு வருமானம் தவிர்த்து, பின்வரும் சலுகைகளைப் பெற இம்மன்னிப்பு வகைசெய்கின்றது.

(1) பிரகடனத்தின் பிரகாரம் பிரகடனப்படுத்திய வருமானசலுகைவரி விகிதப் பிரகாரம் வெளிப்படுத்தாதவருமானத்தில் 33 1/3 வீதத்திலோ அல்லது வைப்புப் பணமாகதிட்டதொகையில் 50 வீதத்தை இவை வெளிப் படுத்தாத பணம் எனப் பிரதிபலிக்கும் போது மேற்கூறியவற்றில் எது கூடியதொகையோ அவை அறவிடப்படும்:

(11) இவ்வாறான தனது வருமானத்தை ஏற்கனவே பிரகடனப்படுத்தாத காரணத்தின் நிமித்தம் தண்டனைகள் எதுவும் விதிக்கப் படமாட்டாது.

### இம்மன்னிப்பால் பெறக் கூடிய நன்மைகள்

(1) இம்மன்னிப்பின் பிரகாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வருமானத்தின் மீது மிகக் கூடிய சலுகை வரிவீ[illegible]தில் 33 1/3 வீதம் வெளிப்படுத்தாத வருமானத்தில் அல்லது வைப்புப் பணத்தில் 50வீதம். இவை மறைக்க[illegible] எனப்பிர[illegible] மேற்[illegible]ப்பட்ட இரு வழி[illegible]

3. கம்பனிகளை அல்லது தனிப்பட்டோர் தொகுப்புக்களைப் பொறுத்த மட்டில் அவற்றின் செயலாளர் முகாமையாளர் அல்லது வேறு தலைமை அலுவலர்.

### இம் மன்னிப்புக்கு ஏற்புடைய வருமானம்

இலாபங்களும் வருமானங்களும் சரியாகப் பிரகடனப் படுத்தாமையை நிவர்த்திக்க இம் மன்னிப்பு ஏற்புடையதாகின்றது.

1. திரட்டி வைக்கப்பட்டரொக்கப்பணம்.

2. சொந்தச் செலவுகளுக்குப் பயன் படுத்தப்பட்ட தொகைகள்,

இம் மன்னிப்பைப் பயன்படுத்தும் ஒருவர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை:

(1) இந்த மன்னிப்பின் கீழ் வருமானங்களை வெளிப்படுத்து வதற்கு இலகுவான வசதிகள் அளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(2) ஒருவர் உதவியின்றித் தானாகவே வருமானத்தை வெளிப்படுத்தலாம்.

(3 இந்த திணைக்களத்தைச் சேர்ந்த பிரதானமாக இந்த வேலைகளைக் கவனிப்பதற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் அத்தகையோருக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து கொடுப்பார்கள்.

### யாருடன் தொடர்பு கொள்வது

(1) கொழும்பில் வசிக்கும் ஒருவர் இச்சலுகையைப் பயன்படுத்த விரும்பினால் அவர் கொழும்பு 1, செனற் சதுக்கத்திலிருக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாள[illegible]

சலில் குறிக்கப்படல் வேண்டும்.

(3) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புலன் விசாரணை பிரதி ஆணையாளரிடமோ அல்லது இத்திணைக்களத்தைச் சேர்ந்த பிராந்தியப் பணிமனை வரிமதிப்பாளரிடமோ நேரடியாகவும் குறித்த வருமானத்தை வெளிப்படுத்தலாம்.

(4) மன்னிப்பின் காலவரையறை:

மன்னிப்பின் காலவரையறை 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது: எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது வருமானத்தை வெளிப்படுத்துமாறு புத்திமதிகூறப்படுகின்றார்கள்,

## முசலி வடக்கு கி. ச. தேர்தல்

முசலி, செவ்வாய்

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த முசலி வடக்கு கிராமச்சபைபொதுத் தேர்தல் இம்மாதம் 30-ம் திகதி நடைபெறும்.

... ...

## மக்கள் விருப்பம் நிறைவேறியது

அம்பன், செவ்வாய்

குடத்தனைக் கிராம சபையின் 7ம் வட்டார மக்கள் சிலர் குடத்தனைக் கிராம சபையின் வட்டார எல்லைகள் பிரிக்கப்பட்ட சமயத்தில் தமது பெயர்கள் 8-ம் வட்டாரத்துடன் சேர்த்துப் பிரிக்கப்பட்டதை ஆட்சேபித்து உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இதனை விசாரணை செய்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அம்பன் கிராம சேவையாளர் பிரிவாகிய அம்பன் எல்லைக்குளத்தையே 7-ம் வட்டார எல்லையாக கணிக்கும்படியும் 8-ம் வட்டார எல்லையாகவிருந்த அம்பன் கொட்டோடை [illegible]டைமாற்றி எல்லைக்குளத்தை எல்லையாக வைத்து வட்டாரத்தைப் பிரிக்கும்படியும் குடத்தனைக் கிராம சபை முதல்வருக்கும் அறிவித்துள்ளார்.

## கைதடி சைவ மாநாட்டில் வரவிருக்கும் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், புதன்

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய இரு பாடல்பெற்ற சைவ ஸ்தலங்களையும் புனித நகராக்குமாறும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நினைவு முத்திரைகளை வெளியிடுமாறும் அரசாங்கத்தைக்கோரும் தீர்மானங்கள் இன்று கைதடியில் நடைபெறும் கைதடி இந்து வாலிபர் சங்க ஏழாவது சைவமாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கிறது.

மாநாட்டில்கொண்டுவரப் படவிருக்கும் மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

இந்துசமய விவகார ஒதுக்கீட்டுத் தொகையை அதிகரிக்கச் செய்யவேண்டும்.

சைவ அரசாங்க ஊழியர்களுக்கு வெள்ளிக்கிழமைகளில் இரு மணித்தியால சிறப்பு விடுமுறை வழங்க வேண்டும்.

இந்து ஆலய பரிபாலன மசோதாவை உடனடியாக செயல்படுத்தவேண்டும்.

மகா சிவராத்திரி தின விழாவை பகிரங்கவிடுமுறையுடன் மட்டுமன்றி வர்த்தக விடுமுறையாகவும் ஆக்க வேண்டும்.

கைதடி இந்துவாலிபர் சங்கத்துக்கு அரசினர் வழங்கிய காணிக்குள் 'சைவ இளைஞர் அநாதை இல்லம் நிறுவ மான்யம் வழங்கவேண்டும்.

இலங்கை பல்கலைக் கழகத்தில் இந்து சமயம் போதிக்க சகல வசதிகளும் செய்யப் படவேண்டும்.

......

## 'ஒருதிசைப்பாதை கூடாது''

பருத்தித்துறை, செவ்.

''நாடுகளுக்கிடையே கலை இலக்கியக் கருதுக்கள் பரிமாறப்படல்வேண்டியது எவ்வளவு அவசியமோ, அதேபோல, அப்பாலம் ஒருதிசைப்பாதையாக அமையாதிருக்கவேண்டியதும் அவசியமாகும். தமிழகத்தின் தரமான இலக்கிய ஏடுகளை நாம் ஏற்றுப் பாராட்டும் அதே வேளையில் எமது ஏடுகளையும் தமிழகம் ஏற்பதையே நாம் விரும்புகிறோம்''

நேற்று மாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வரலாற்று அரசியல் மன்றத்தில் உரை நிகழ்த்திய எழுத்தாளர் 'தெணியான் இவ்வாறு கூறினார். மன்றத் தலைவர் திரு. என். இராசேஸ்வரன் தலைமை வகித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், ஆபாசம் கலந்த தரங்குறைந்த ஏடுகள் ஈழத்தில் தோன்றினாலும் அவற்றின் மீது தடை விதிப்பதை வரவேற்கவேண்டுமென்றும், ஈழத்தின் பின்னணிச்சூழல், தேசியம் என்பவற்றைத் தளமாகக் கொண்டெழும் ஏடுகளுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டுமென்றும் கூறினார்.

... ...

## போட்டியிடுவார்

சுழிபுரம், செவ்

வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா புதிய காரைநகர் கிராம சபைத்தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

......

## கிராமிய வைத்தியசாலை

அம்பன், செவ்வாய்

அம்பன் மருத்துவ மனையும், மருந்தகமுமாகஇயங்கிவரும் அம்பன் அரசினர் வைத்தியசாலை விரைவில் கிராமியவைத்தியசாலையாக உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் தோன்றுகின்றன அம்பன் அரசினர் வைத்தியசாலையை உள்ளடக்கிய குடிசன மதிப்பையும், வரைபடத்தையும் தயாரித்து அனுப்புமாறு சுகாதார அமைச்சு யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகரைக்கேட்டுள்ளது.

## எம். ஸி வருகை

ஏறூவூர், செவ்வாய்

மட்டக்களப்பு சலவைத் தொழிலாளர்களின் பிரச்னைகள் சம்பந்தமாக அறிவதற்காகஇம்மாத நடுப்பகுதியில் அகிலஇலங்கைசிறுபான்மை தமிழர் மகாசபையின் தலைவரும் நியமன எம்.பி.யுமான திரு. எம்.ஸி. சுப்பிரமணியம் மட்டுநகருக்கு விஜயம் செய்யவிருப்பதாக மட்டக்களப்பு சலவைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ—மனோரமா நடித்த

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ—மனோரமா
நடித்த
**செல்லப் பெண்**

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா—அசோகன்
நடித்த
**மாட்டுக்கார வேலன்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கடைசி வாரம்
ஜெமினி கணேசன்-காஞ்சனா
நடித்த
**சாந்தி நிலையம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்






சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்த மனிதன்**
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


...க்கு இடமுண்டு சிலருக்கு புதிதாக தொழில்வாய்ப்புக்கு இடமுண்டு. தெய்வத்தின் துணையும் உண்டு

துலாம்- இலாபகரமான தினம். பொருள்வரவுக்குத் தாராளமாக இடமுண்டு வணிகர்களுக்கு வியாபார விருத்தி ஏற்படும்.

விருட்சிகம்- எதிலும் மந்த நிலை தென்படும். சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம். துக்கமான தினம்.

தனுசு- துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமேற்படும்.

மகரம் பணமுடை தீரும். பந்துக்களின் தொடர்புகள் பெருகும். குடும்பத்தில் பரவசமான சூழ்நிலை தென்படும்.

கும்பம்- நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும். உறவினர்கள் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும். மட்டமானதினம்.

மீனம்- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், புதிய அனுபவங்கள் கிடைக்கும். குறிக்கோளில் வெற்றி உண்டு. ஆனந்தநிலை.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 2-00, 6-00, 9-30
எம். ஜி. ஆர். பானுமதி
நடித்த
**மலைக்கள்ளன்**

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
**உத்தம புத்திரன்**
(புதிய கொப்பி)

**REGAL**
Jaffna
Daily 4Shows
Clint Eastwood
Richard Burton
in
WHERE EAGLES DARE

Today only
MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Juliano Gemma
in
SONS OF SATAN
(Color-Strictly for adults)


வெளிப்படுத்தாத வருமானத்தில் அல்லது வைப்புப் பணத்தில் 50வீதம். இவை மறைக்கப்பட்ட வருமானம் எனப்பிரதி பலிக்குமாயின் மேற்குறிப்பட்ட இரு வழிவகையால் எதுகூடிய தொகையோ அது அறவிடப்படும். இவை வழமையான கூடுதல் 65வீதம் வரியிலும் குறைவானதாகும்.

(ii) வருமானத்தை வெளிப்படுத்தத் தவறுதல் அல்லது குறைத்து வருமானத்தைக் காட்டிக் கூடிய விபரத்திரட்டுகள் சமர்ப்பித்தல் போன்ற குற்றங்களுக்குச் சாதாரணமாக விதிக்கப்படும் தண்டங்கள் இம்மன்னிப்பின் கீழ்பிரகடனப் படுத்தும் வருமானங்களுக்கு விதிக்கப்படமாட்டாது.

(iii) இம்மன்னிப்பு அளிக்கப்பட்ட காலவரையறைக்குப் பின் வருமானத்தைக் குறைவுபட வெளிப்படுத்தியமை அல்லது வெளிப்படுத்தத் தவறியமை கண்டு பிடிக்கப்பட்டால் கடும்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒருவர் இம்மன்னிப்பின்கீழ் தனது உண்மையான வருமானத்தைப் பிரகடனம் செய்வதன்மூலம் இந்நடவடிக்கைகளுக்கு ஆளாகாமல் விலகக்கூடும்

(iv) பிரகடனப் படுத்துபவர் அதற்குரிய வரியைக் கட்டியபின் மிகுதியைத் தயக்கமின்றி வெளிப்படுத்திப் பிரயோசனப் படுத்தலாம்,

**மன்னிப்புக்கு அருகதையுடையவர்கள்**

(அ) முந்திய வரிமதிப்பு வருடங்களில் தனது வருமானத்தை வரிமதிப்பீட்டுக்குள்ளாக்கத் தவறியவர்கள் எவரும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாம். இவை சேர்த்து

(1) இவ்வாண்டுக்கு வருமானவரி விபரத் திரட்டைச் சமர்ப்பிக்கத் தவறியவர்கள்.

(2) விபரத் திரட்டுக்களைச் சமர்ப்பித்திருந்தும் அறிந்துகொண்டோ வேண்டுமென்றோ அல்லது வேறு விதத்திலோ வருமானத்தைக் குறைவுபட வெளிப்படுத்தியவர்கள்.

(ஆ) இம்மன்னிப்பை
(1) தனியாட்கள்
(ii) பங்குடைமைகள்.
(iii) கம்பனிகள்
iv தனிப்பட்ட சபைகள்
மன்னிப்பின் கீழ் வருமானத்தைப் பிரகடனம் செய்யக்கூடியவர்கள்.

1. தனியாட்கள்
2. பங்குடைமைகளைப் பொறுத்தமட்டில் அப் பங்குடைமையின்பிரதான பங்காளர்.

(1) கொழும்பில் வசிக்கும் ஒருவர் இச்சலுகையைப் பயன்படுத்த விரும்பினால் அவர் கொழும்பு 1, செனற் சதுக்கத்திலிருக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களப் பிரதி ஆணையாளர் புலன் விசாரணைப் பகுதியுடன் தொடர்பு கொள்ளலாம். அத்தகையோர் தொலைபேசிமூலமோ (தொலைபேசி எண் 4264) அஞ்சல் மூலமோ நேரடியாகவோ தொடர்பு கொள்ளலாம்.

(2) ஏனையோர் தமக்குக் கிட்டிய இத்திணைக்களத்தின் பிராந்தியப் பணிமனை வரிமதிப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது தலைமை அலுவலகத்தில் புலன் விசாரணைப் பிரிவு பிரதி ஆணையாளருடன் தொடர்பு கொள்ளலாம். பிராந்தியப் பணிமனைகள் காலி, இரத்தினபுரி, நீர்கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, குருணாகல், பதுளை, நுவரெலியா, மாத்தறை, களுத்துறை ஆகிய இடங்களில் உள்ளன.

**எவ்வாறு வெளிப்படுத்துவது**

(1) கொழும்பு செனற் சதுக்கத்திலுள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் விசாரணைப் பகுதியிலிருந்தோ அல்லது இத்திணைக்களத்தின் பிராந்தியப் பணிமனைகளிலிருந்தோ பெறக்கூடிய படிவத்திஸ் (படிவ இல. ஏ. எம். ரி 1/70) குறித்த வருமானத்தை வெளிப்படுத்தலாம்.

(2) கொழும்பு 1, செனற் சதுக்கத்தில் உள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புலன்விசாரணைப் பகுதிப் பிரதி ஆணையாளருக்கு வருமானத்தை வெளிப்படுத்தி அஞ்சல் அனுப்பலாம். வருமான வரிக்கோவை ஒன்றிருப்பின் அக்கோவை இலக்கம் அஞ்

## மழையின்றி வரட்சி

முசலி. செவ்வாய்

கடந்த மூன்று வாரங்களாக கட்டுக்கடவை முருங்கனைக் குளத்தை அடுத்துள்ள மாதோட்டப் பகுதியாகிய முருங்கன். உயிலங்குளம் நானாட்டான் முசலி ஆகியகிராமங்களுக்கு மழை இல்லாமல் நீண்டவரட்சி ஏற்பட்டுள்ளதால் இங்குள்ள விவசாயிகள்பெரிதும் கவலை அடைந்துள்ளனர்

புழுதிவிதைப்பில் போட்ட விதைகளெல்லாம் வரண்டு பிரயோஜனமற்றதாக போய்விடுமென்று இவர்கள் அஞ்சுகிறார்கள்.

பன் வொட்டோடை இருட்டைமாற்றில் எல்லைக்குள, நிதை எல்லையாக வைத்து வட்டாரத்தைப் பிரிக்கும்படியும் குடத்தனைக் கிராம சபை முதல்வருக்கு அறிவித்துள்ளார்:

அம்பன் அரசினர் வைத்தியசாலையை உள்ளடக்கிய குடிசன மதிப்பையும், வரைபடத்தையும் தயாரித்து அனுப்புமாறு சுகாதார அமைச்சு யாழ்ப்பாணம் சுகாதார சேவை அத்தியட்சகரைக்கேட்டுள்ளது.

வரும் நியமன எம்.பி.யுமான திரு. எம்.ஸி. சுப்பிரமணியம் மட்டுநகருக்கு விஜயம் செய்யவிருப்பதாக மட்டக்களப்பு சலவைத் தொழிலாளர் சங்கச் செயலாளர் தெரிவித்தார்.


# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்
★ ஓய்வெடுங்கள்
★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்
★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்
★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்
டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள்.

**தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.**

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

# 'யாழ். 15-ம் வட்டாரத்தில் பிரசவ விடுதி வேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பதினைந்தாம் வட்டாரத்தில் மணல் தறையில் ஒரு பிரசவ விடுதி முன்பு இருந்தது. பின் வீட்டுச் சொந்தக்காரரின் நிர்ப்பந்தத்தால் இது மூடப்பட்டது. பிரசவ விடுதிக்குத் தேவையான தளபாடங்களும் இருந்தபோதிலும் பிரசவ விடுதியை மீண்டும் திறக்கவேண்டும் என்று இம்மன்றம் எட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தும், ஏற்ற வசதியான கட்டிடம் கிடையாமையால் அதனை நிறுவமுடியாது போய்விட்டது தற்போது பதினைந்தாம் வட்டார மக்கள் தூர இடங்களில் உள்ள பிரசவ விடுதிகளைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பால்மா முதலிய பொருட்களைக் குழந்தைகளுக்குப்பெறுவதிலும் கர்ப்பிணிகளுக்கு மருந்து பெறுவதிலும் பதினைந்தாம் வட்டார மக்கள் படும் அவதியை நீக்குமுகமாக அவர்களுக்கென ஒரு பிரசவவிடுதியை அமைப்பதென இம்மன்றம் தீர்மானிக்கிறது.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை அடுத்து வரும் யாழ். மாநகரசபை மாதாந்தக் கூட்டத்தில் கொண்டுவருவதற்குச் சபை நிகழ்ச்சி நிரலில் இடம் தருமாறு கோரி, சபை உதவி மேயர் திரு ஆ. துரைராஜசிங்கம் மேயரிடம் கேட்டுள்ளார்.

# இந்து சமுத்திரத்தில் அணு ஆயுத சோதனைகள் நடக்கக்கூடாது

## அமெரிக்கா, ரஷ்யா ஐ. நாவைக் கேட்கிறது

நியுயோர்க், நவ 3

இந்துசமுத்திரத்தில் அணு ஆயுதபரிசோதனைகள் ஒன்றும்நடத்தக்கூடாது. அத்தகைய பரிசோதனைகளுக்கு ஐ நா ஒரு பொழுதும் நாடுகளுக்கு அனுமதிவழங்கக்கூடாது

சோவியத்யூனியனும், ஐக்கிய அமெரிக்காவும் இணைந்து ஐ நா பொதுச் சபைக்கு இவ்வாறுவேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்துசமுத்திரம் பாதுகாக்கப்பட வேண்டிய கேந்திர நிலையமாகும் ஆதலால் உலக நாடுகள் தங்கள் அணு ஆயுத பரிசோதனைகளை இதரசமுத்திரங்களில் நடத்துவது போன்று இச்சமுத்திரத்தில் நடத்தக்கூடாதுஎன மேலும் இவ்விரு வல்லரசுகளும் வலியுறுத்தியுள்ளன.

## மொபுட்டு ஜனாதிபதி

லியப்போட்வில்லி, நவ 3

காங்கோவில் ஜனநாயக முறைப்படி நடந்த முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் திரு. ஜோசப் மொபுட்டு கிட்டத்தட்ட 100 சதவீத வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார் என செய்திகள் கூறின.

இத்தேர்தலில் 18 வயதுடைய சகலரும் கட்டாய வாக்கு அளிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது

இத்தேர்தலில் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்ட ஒரேயொருவேட்பாளர் திரு. மொபட்டுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

......

## அமைச்சு புள்ளி விபரம் கோரியுள்ளது

கோட்டை, செவ்வாய்

சகல தோட்டப் பாடசாலைகளையும் அரசாங்கம் எடுக்கத் தீர்மானித்துள்ளது. தோட்டப்பாடசாலைகள் பற்றிய புள்ளி விபரங்களை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சகல பிரதேசக் கல்விடைரக்டர்களையும் கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

## விவேகானந்தர் நினைவுப்பாறை புனித தலமாகும்

சென்னை, நவ 3

கன்னியாகுமரியிலுள்ள விவேகானந்த பாறை நினைவுச்சின்னம் புனியாத்திரைத் தலமாகப் பிரகடனப் படுத்தப்படும். இத் தகவலை பாரத உபராஷ்டிரபதி திரு. ஜி.எஸ். பாட்டக் தெரிவித்துள்ளார்.

பாரதத்தின் விஞ்ஞானம் தொழில் நுட்பம் என்பவற்றை எதிர்கால பாரதத்துக்கு விளக்கியவர் விவேகானந்தரென்றும் விவேகானந்தர் நினைவுப்பாறைச் சின்ன விழாவின் இறுதி நாளின் போது உபராஜ்டிரபதி பேசும்போது தெரிவித்தார். 800 பக்கங்கள் கொண்ட நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

......

## நிக்ஸன் விருந்து

## வருத்தம் தெரிவித்து இந்திரா கடிதம்

புதுடில்லி, நவ. 3

அமெரிக் அதிபர் நிக்ஸனது மாளிகையில் நடைபெற்ற விருந்தொன்றில் கலந்துகொள்வதற்கு வருத்தம் தெரிவித்தபிரதமர் இந்திரா காந்தி கடிதம் எழுதியுள்ளதாக நியுயோர்க் இந்தியப் பத்திரிகை ஏஜன்ஸி செய்தி தெரிவித்துள்ளது.

அக்டோபர் 24-ந் திகதி ஐ நா. வெள்ளி விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்ற பிரதமர் இந்திரா காந்தி அதிபர் நிக்ஸன் அளித்த விருந்தில் கலந்து கொள்ளவில்லை. இது குறித்து பிரதமர் இந்திரா சொந்த முறையில் சிநேகபாவமுள்ள சிறிய கடிதமொன்றை அதிபர் நிக்ஸனுக்கு எழுதியுள்ளார். அதிபர் நிக்ஸன் தனது தந்தை ஜவகர்லால் நேருவை ஐ. நா. சபையில் பாராட்டிப் பேசியமைக்கு திருமதி இந்திரா அக்கடிதத்தில் நன்றி தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

......

## தேர்தல் பிரசாரம் வேட்பாளரை பலி கொண்டது

# 'கராச்சி விமானதளவிபத்து: விரிவான விசாரணை தேவை'

## போலந்து அதிபர் கேட்கிறார்

கராச்சி, நவ. 3

ஞாயிற்றுக்கிழமைகராச்சி விமான நிலையத்தில் போலந்து நாட்டு உதவி வெளிவிவகார அமைச்சர் திரு. சிக்பிரித் வொல்னியாக் லொறி விபத்தில் மரணமானது விபத்து மரணமல்ல. அது கொலை நிகழ்ச்சி எனக் கருதப்படுகிறது, ஆதலால் இந்நிகழ்ச்சி குறித்து பாகிஸ்தான் விரிவான விசாரணை நடத்திஉண்மையை வெளிப்படுத்தவேண்டுமென போலந்து ஜனாதிபதி ஸ்ஸைஸல்கி பாகிஸ்தானை கேட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமையன்று கராச்சி விமான நிலையத்தில் பாகிஸ்தானுக்குநல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டிருந்த போலந்து ஜனாதிபதியும் அவரது குழுவினரும் நிற்கையில் விமானநிலையத்தைச் சேர்ந்த சாமான் ஏற்றும் லொறி ஒன்று வேகமாக வந்துஇவர்கள் நின்றிருந்த வரிசையில் மோதியதால்மேற்படி அமைச்சரும் மற்றும் மூவரும் ஸ்தலத்திலேயே மரணமானதும் தப்பியதும் வாசக நேயர்கள் அறிந்ததே.

லொறிச் சாரதி ஒரு வலதுசாரி எனவும் இவ்விபத்து வேண்டுமென்று நிகழ்த்தப்பட்டது என்றும் கருதப்படுவதால் லொறிச் சாரதி முகமத் அப்துல்லாமீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது

கராச்சி பொலிசார் இவ்விபத்து குறித்துத் தீவிர விசாரணை நடாத்திவருகின்றனர் இவ்விபத்தில் 20பேர் கடும் காயமுற்றுள்ளதாகவும் கூறப்படுகிறுது.

# நாஸரின் பின் கெய்ரோவில் நடைபெறும் அரபு உச்சி மகாநாடு

கெய்ரோ, நவ 3

கெய்ரோவில் அரபு நாடுகளின் உச்சி மகாநாடொன்று 3 நாட்களுககு நடைபெறவிருக்கிறது.

ஜனாதிபதி நாஸரின் மறைவுக்குப் பின்னர் ஐக்கிய அரபுக் குடியரசில் நடைபெறும் முதலாவது உச்சிமகாநாடு இதுவாகும்.

எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் தலைமையில் கூடும் இம்மகாநாட்டில் அரபு நாடுகள் யாவும் கலந்துகொள்ளவிருக்கின்றன

அரபு நாடுகளை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் அரபு நாடுகளின் காலம் குறிப்பாக ஜோர்டான் பிரச்னை ஆகியன குறித்தும் உலக விவகாரங்களில் அரபுநாடுகளின் நிலைகுறித்தும் இம்மாநாட்டில் ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# வர்த்தகப் பாடங்களையும் சேர்க்க கோரிக்கை

உடுப்பிட்டி, செவ்

கணக்கியல் வர்த்தகமும் நிதியும் ஆகிய இரண்டு பாடங்களையும் பல்கலைக்கழகப் புகுமுகப்பரீட்சைக்கு அனுமதிக்கும்படி உதவிக் கல்வியமைச்சர் திரு பீ, வை. துடாவையிடம் வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கத் தூது கோஷ்டி கேட்டுக்கொண்டது. சங்கச் செயலாளர் திரு. அ. தேவச்சந்திரன் தலைமையில் இத்தூது கோஷ்டி உதவிக் கல்வியமைச்சரைப் பேட்டி கண்டது.

இவ்விரு பாடங்களின் நிலைமை பற்றி ஆராய்வதாகவும் கணக்கியல் வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியடைந்த மாணவர்கள் தொகை பற்றித்தமக்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்கும்படியும்உதவிக் கல்விஅமைச்சர் திரு. துடாவை தூதுக்குழுவினரிடம் கேட்டுக் கொண்டார்.

இதனைத்தொடர்ந்து சங்கச் செயலாளர் வர்த்தக பாடங்களுடன் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குள் புகாமலிருக்கும் மாணவர்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இந்து சமுத்திரத்தில்

# மீன்பிடி தொழில்விஸ்தரிப்பு ஐ. நா. நடவடிக்கை

நியுயோர்க், நவ. 3

ஐ. நா. உணவு விவசாய நிறுவனம் இந்து சமுத்திரத்தின் மீன்பிடித் தொழிலை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது

இந்துசமுத்திரத்தின் மீன்பிடித் தொழிலை விஸ்தரிப்பதற்கு உதவ 29 நாடுகள் முன்வந்துள்ளன. நவீன இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி இத்தொழிலை நவீன மயமாக்குதலே மேற்படி ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதற்காக இந்து சமுத்திரத்திற்கு அருகாமையில் உள்ள நாடுகளுக்கு நிதியுதவி, மீன்பிடி உபகரண உதவி, தொழில் நுட்ப உதவி ஆகியன செய்வதற்கும் உணவு விவசாய நிறுவனம் தீர்மானித்துள்ளது.

## மேற்காசியா

# "பாதுகாப்புச் சபைத்தீர்மானத்தை ஐ நா. மாற்றவோநீக்கவோகூடாது"

லண்டன், நவ.3

மேற்காசியாவில் அமைதி நிலவ 1967-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பந்தோபஸ்து விதிகளை ஐ. நா. மாற்றவோ அல்லது அதை நீக்கவோ கூடாது என பிரிட்டன் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர் மகாநாடொன்றிலேயே பிரிட்டன் மேற்கண்டசெய்தியை விடுத்துள்ளது. இம் மகாநாட்டில் பிரிட்டன் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மேற்காசிய பிரச்னைக்கு தீர்வுகாண வேண்டுமானால் இஸ்ரேல் சண்டையின் போது ஐக்கியஅரபுக் குடியரசிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களை திருப்பி அந்த நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும் அரபுநாடுகள் தொடர்ந்து போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும். இத்

## "மண்ணும் நீரும் வளத்தின் அத்திவாரம்"

பருத்தித்துறை, செவ்.

"எமது நாட்டின் வளம், மண்ணிலும் நீரிலும் தங்கியுள்ளது இவற்றை உதாசீனஞ்செய்த காரணத்தினாலேயே நாம் பிற நாடுகளிலிருந்து உணவை எதிர்பார்க்கவேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. இலங்கையில் மண்வண்டல் காரணமாகவே, காலத்திற்குக் காலம் மண்சரிவு போன்ற ஆபத்துகள் நிகழ்கின்றன. விவசாயம் வீழ்ச்சியடைகிறது."

இவ்வாறு [illegible] சென்று [illegible] ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு [illegible] நெல்லியடி மத்திய

# முசலிச் செய்திகள்

— நமது நிருபர் புஷ்பம் தேவதாசன் —

முசலி, திங்கள்

பெரியமுறிப்பு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள, வன பரிபாலன இலாகா தேக்கமர உற்பத்தி வாடியில் உள்ள தொழிலாளர் குடிசை தீப்பிடித்து எரிந்து சாம்பலாகியது. இதனால் சேதத்துக்குள்ளாகிய தொழிலாளர் தமக்கு நிவாரணம் அளிக்கும் வண்ணம் வவுனியா வன பரிபாலன இலாகாவை கேட்டுள்ளனர்.

## பிரிவுபசாரம்

'திரு. தேவரத்தினம் டான்போத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும், துச்சமாக மதித்து மன்னார் மாவட்டத்தின் முன்னேற்றத்துக்காக சேவையாற்றி

## வயோதிபர் மடம்

தலைமன்னார்தொடங்கிமுள்ளிக்குளம்வரை மடு றோட் தொடங்கி பனங்காமம் ஈறாக மூன்று காரியாதிகாரி பிரிவுகொண்ட மன்னார் மாவட்டத்தில் ஒரு வயோதிபர் மடம் அமைக்கும் முயற்சியில் மன்னார் பட்டின சபைத் தலைவர் ஜனாப் எம். எஸ் ஏ. றகீம் ஈடுபட்டுள்ளார்.

— —

## 'வசந்தன் ஆட்டம்'

தாவடி, செவ்

தாவடி வடக்கு குழந்தை சிட்டிக் கணையன் வளவு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் அம்பாள் விரும்பும் ஆட்டம் எனப் புராணம்

# புங்குடுதீவுச் செய்திகள்

ஊரதீவு; செவ்வாய்

கடந்த பல வருடங்களாக வெலிமாகாணங்களில் கடமை புரிந்த ஆசிரியர் திரு. கே சேனாதிராசா புங்குடுதீவு வல்லன் ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பாடசாலைக்கு புதிய கட்டிடம்

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலைக்கு இரு [illegible] நீளமான புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்[illegible]

## புலோலி கி. ச. தேர்தல்

# 12 வட்டாரங்களில் இதுவரை 34 பேர் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

புலோலி கிராமசபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் கடந்த 30-ந் திகதி வெள்ளிக்கிழமை புலோலி கிராமசபை அலுவலகத்தில் வைத்து யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி திரு. எஸ். நடராசாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

12 வட்டாரங்களிலும் பலத்த போட்டிகள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கடைசித்தினமான இம்மாதம் 5ம் திகதி மட்டும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதுவரை 12 வட்டாரங்களிலும் போட்டியிட முன்வந்திருப்பவர்களின் பெயர் [illegible] சுப்பிரமணியம், கந்தையா செல்லையா. ஆ திருநாவுக்கரசு 5ம் வட்டாரம் திருவாளர்கள் ஆள்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை சின்னையா, பாலசுந்தரலிங்கம்கதிர்காமு பாலகிருஷ்ணர், கே தங்கராசா. 6ம் வட்டாரம் திருவாளர்கள் சின்னையா பாலசுந்தரலிங்கம், சின்னையா சிதம்பரப்பிள்ளை, வி கந்தசாமி. 7ம் வட்டாரம் திரு இராமலிங்கம் செல்லத்துரை 8ம் வட்டாரம் திருவளர்கள் கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை, கதிர்காமர் வைரவிப்பிள்ளை கதிராமு. 9ம் வட்டாரம் திருவாளர்கள் தம்பு சிதம்பரப்பிள்ளை [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'திரு. தேவரத்தினம் டான்போத் தனது உடல், பொருள், ஆவி மூன்றையும், துச்சமாக மதித்து மன்னார் மாவட்டத்தின் முன்னேற்றத்துக்காக சேவையாற்றியமையால் அவரின் சேவை மன்னார் வாழ் மக்கள் ஒவ்வொருவரின் மனத்தில் அழியாது பதிந்துவிட்டது' என மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றி இடமாற்றம் செய்யப்பட்ட திரு. தேவரெத்தினம் டான்போத்துக்கு நாரனட்டான் மேற்கு கிராமசபையால் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவ விழாவின்போது முசலிக்காரியாதிகாரி திரு வைத்திலிங்கம் சொக்கலிங்கம் பேசுகையில் கூறினார்.

இவ்விழாவுக்கு நானாட்டான் மேற்கு கிராமச்சபை அக்கிராசனர் திரு. சூசைப்பிள்ளை இம்மனுவல்பிள்ளை தலைமை வகித்தார்.

## நல்லனவற்றை எடுக்க வேண்டும்

தமிழன்னை படைத்த அளப்பரிய கலைகளில் நாடகக்கலையும் ஒன்றாகும். நாடகத்தில்வரும் கதாபாத்திரங்களின் குணதிசயங்களில் நல்லனவற்றை எடுத்துக்கொள்ளல் வேண்டும் அப்படி விரிந்த கண்கொண்டு நாடகத்தை தாம் ரசித்தால் நாடகக்கலை ஒரு பொழுதுபோக்குக் கலையாக மட்டுமன்றி ஒரு தெய்வீக கலையாகவும் மதிக்கப்படும்' என அடம்பன் சென் மேரிஸ் மகாவித்தியாலயத்தில் வங்காலை வளர்கலை மன்றம் அரங்கேற்றிய 'இலங்கேசன்' என்னும் நாடக அரங்கேற்றம் தொடக்க விழாவின்போது மாந்தைப்பிரிவு காரியாதிகாரி திரு. முத்தையா சுப்பிரமணியம் பேசுகையில் கூறினார்.

அடம்பன் பங்குக்குரு வணபிதா ஜெபநேசனும் பேசினார்.

## இந்து கலாசார நிலையம்

கொழும்பு, செவ்

இந்துமாமன்ற ஆதரவில் கொழும்பிலே கட்டப்படவிருக்கும் இந்து கலாசார நிலையம்பற்றி வருகிற 6-ந் திகதி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் மன்றத்தின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று காலை 9-30 மணிக்கு நடைபெற இருக்கிறது.

0 0 0

விவசாயப் பயிற்சிப் பாடசாலை முதலாவது ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புக்கள் முதலாம் திகதி ஆரம்பமாகியுள்ளன.

தாவடி, செவ்

தாவடி வடக்கு குழந்தை சிட்டிக் கணையன் வளவு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் அம்பாள் விரும்பும் ஆட்டம் எனப் புராணம் கூறும் 'வசந்தன் ஆட்டம்' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 60 க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொண்டனர்.

— —

## பயிற்சி பெற 6000 பேர் விண்ணப்பம்

கோட்டை, செவ்வாய்

பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற 6000 பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவை யாவும் திட்டமிடல் அமைச்சின் வேலைவாய்ப்புப் பகுதியில் பரிசீலனை செய்யப்படுகின்றன.

இந்த விண்ணப்பதாரிகளில் அநேகர் ஏற்கனவே வேலைவாய்ப்புப் பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

டிசம்பர் மாத முற்பகுதியில் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுபவர்களுக்கு அனுமதிக் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன. அடுத்தாண்டு ஜனவரியில் இப்பயிற்சி ஆரம்பிக்கப்படவிருக்கிறது. ஆரம்பிக்கப்படும் தினத்தன்று நவரங்ககலாவில் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா இப்பயிற்சித் திட்டத்தை ஆரம்பித்துவைப்பார்.

இம்மாதம் முதலாந் திகதியிலிருந்து இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு ஜே. எஸ் பர்ஞன்டோ வேலைவாய்ப்புப் பிரிவு அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

—

உரும்பராய்

## கம். வாலிப சங்க நிர்வாகிகள்

மாவிட்டபுரம், செவ்

உரும்பராய் கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்கக் கூட்டம் திரு கே. தவஞானம் தலைமையில் நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: அ. மகேந்திரன், உபதலைவர்: எம் யேசுதாசன், செயலாளர்: எஸ், நடராசா, உபசெயலாளர்: வி. செல்வராசா, பொருளாளர்: க. தியாகராசா. 10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

...யரிடம் இருந்து கைப்பற்றிய பிரதேசங்களை திருப்பி அந்த நாடுகளுக்குக் கொடுக்க வேண்டும் அரபுநாடுகள் தொடர்ந்து போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும். இத்துடன் தென் ஆபிரிக்க நாடுகள் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்புக்குத் தொடர்ந்து உதவும்.

......

## ரவிச்சந்திரன் மயிரிழையில் உயிர்தப்பினர்

சென்னை, நவ. 3

பிரபல தமிழ் நடிகர் ரவிச்சந்திரன் ஸாம்பூர் ரயில் விபத்தில் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

ஸாம்பூரின் சமீபத்தில் நடந்த ரயில் விபத்தில் திரு ரவிச்சந்திரனும் சிக்கிக் கொண்டார் இவர் கொச்சி மெயில் வண்டியின் சென்னை கோவை பெட்டியில் பிரயாணம் செய்தார் இவ் விபத்தில் உயிர் இழந்தவர்களில் அநேகர் கோவை பெட்டியில் இருந்தவர்கள் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

......

## ஒலியைவிட வேகமான விமானம்

லண்டன், நவ 3

பிரிட்டனின் பிரமாண்டமான தயாரிப்பான 'கான்கார்டு002' விமானம் இப்போது சோதனையின் இறுதிக்கட்டத்தில் வந்து நிற்கிறது சமீபத்தில் நடைபெற்ற சோதனையில் இவ் விமானம் மணிக்கு 1242 மைல் வேகத்தில் பறந்தது.

இந்த விமானத்தின் முழு வேகம் 1400 மைல்களாகும் அதாவது ஒலியைப்போல் இருமடங்கு வேகமுடையதாகும். இந்த அதி வேகமான விமானத்தை பிரிட்டிஷ்-பிரஞ்சு நிறுவனங்கள் கூட்டுச் சேர்ந்து தயாரித்துள்ளன.

......

## குறிஞ்சிக் குமரன் திருக்கல்யாணம்

பேராதனை, செவ்வாய்

இலங்கைப்பல்கலைக்கழகக் குறிஞ்சி குமரன் கோவில் திருக்கல்யாண விழா இம் மாதம் 5ம்திகதி நடைபெறவிருக்கிறது. காலையில் அபிஷேக ஆராதனைகளும், பி ப 4-30மணிக்குத் திருக்கல்யாணமும், 7மணிக்குத்திருவுலாக் காட்சியும் இடம் பெறும்

...விவசாயம் வீழ்ச்சியடைகிறது.''

இவ்வாறு அமெரிக்கா சென்று பலவித விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு மீண்ட நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் திரு. கே. எஸ் குகதாசன், காரைநகர் இந்துக்கல்லூரி விஞ்ஞான மன்றத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

செல்வி என். இராசேஸ்வரி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

......

## நூல் நிலைய நிதிக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண நூல்நிலைய வளர்ச்சிக்கு நிதி திரட்டும் பொருட்டு விவசாய கைத்தொழிற் பொருட்காட்சிகளியாட்ட விழா ஒன்றை நடத்துவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இம்மாதம் 9ந் திகதி மாலை 4-30 மணிக்கு மாநகரசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பொதுசன நூலக வளர்ச்சியில் அக்கறை கொண்ட சகலரையும் சமூகமளிக்கும்படி மாநகர முதல்வர் திரு. ரி. எஸ். துரைராசா கேட்டுள்ளார்.

......

## ஜவுளி இல்லை

புலோலி, செவ்வாய்

பருத்தித்துறை மக்கள் கூட்டுறவு ஸ்தாபனத்தில் கடந்த சில தினங்களாக ஜவுளி வகைகள் இல்லாததால் மக்கள் கூட்டுறவுக் கடைக்குச் சென்று ஏமாற்றம் அடைகிறார்கள்.

அங்கு கடமையாற்றும் ஊழியர்களிடம் இதுபற்றிக் கேட்டபோது இருப்பிலிருந்த ஜவுளி வகைகள் தீபாவளியுடன் முற்றாக முடிவடைந்து விட்டதாகவும். தாங்கள் மேலிடத்திற்குப் புகார்செய்தும் இதுவரை ஜவுளிகள் அனுப்பப்படவில்லையெனவும் தெரிவித்தனர்.

......

## லொறி குடைசாய்ந்தது

வேலணை, செவ்வாய்

அல்லைப்பிட்டிக் கண்மையில் எரு ஏற்றிவந்த லொறி ஒன்று குடைசாய்ந்துள்ளது. வேறு வாகனத்திற்கு வழிவிட்டுக்கொடுக்கும் பொருட்டு பாதையோரமாக ஒதுங்குகையிலேயே லொறி சரிந்தது. லொறிக்குச் சேதமேற்பட்ட போதிலும் தெய்வாதீனமாகச் சாரதி உயிர் தப்பினார்.

### புதிய கட்டிடம்

புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலைக்கு இருநூறு அடி நீளமான புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக அரசாங்கம் பதினையாயிரம் ரூபா வழங்கியுள்ளது.

### இடியும் நிலையில் பாடசாலை

நூறு ஆண்டுகளுக்கும் மேலான பழமையான புங்குடுதீவு அமெரிக்கன் மிஷன் பாடசாலையின் கட்டிடத்தின் நிலை பெரிதும் மோசமாக இருக்கிறது. குழந்தைகளின்மீது இக்கட்டிடம் இடிந்து விழுந்துவிடுமோ என அஞ்சப்படுகிறது. இதுபற்றி அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### புகார்

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையைச் சேர்ந்த ஆசிரியர்களான ஏ. தாமோதரம்பிள்ளை, கே. தாமோதரம்பிள்ளை ஆகியோர் 9-9-70 தொடக்கமும், சேர் துரைசுவாமி வித்தியாசாலை ஆசிரியர் திரு. என். பொன்னம்பலம் 1-10-70 தொடக்கமும் வல்லன் ஸ்ரீசண்முகநாத வித்தியாசாலைக்கு நியமிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இதுவரை எவரும் எமது கிராமப்பாடசாலையில் கடமை ஏற்கவில்லை எனக் கூறும் கடிதமொன்றை வடபிரதேச வித்தியாதிபதி திரு. வி. சங்கரலிங்கத்துக்கு வல்லன் முன்னேற்றக் கழகம் அனுப்பிவைத்துள்ளது. பிரதிகள் கல்வி அமைச்சுக்கும் தொகுதி எம். பி. திரு. கா. பொஇரத்தினத்துக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

### விவசாயிகள் கவலை

தீவுப்பகுதியில் நான்கு வாரங்களுக்குமுன் பெய்த மழையைத் தொடர்ந்து தமது வயல்களில் நெல் விதைத்த பல விவசாயிகள் தற்போது மழையின்றிப் பயிர்கள் வாடுவதைக்கண்டு கவலையுற்றுள்ளனர். சென்ற வருட நிலைமைதான் இம்முறையும் ஏற்படுமோ என்று விவசாயிகள் அச்சம் கொண்டுள்ளனர்.

### மீண்டும் குடிநீர்க் கஷ்டம்

புங்குடுதீவுப் பகுதியில் சமூக சேவைப்பகுதியினரால், இலவசமாக வழங்கப்பட்டுவந்த குடிநீர் மழை பெய்ததைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டது. ஆனால் இப்போது மீண்டும் வரட்சி ஏற்பட்டுள்ளதால் மக்கள் நீர்பெறுவதில் பெரும்இன்னல் அடைகிறார்கள்.

......

## தேர்தல் பிரசாரம் வேட்பாளரை பலிகொண்டது

கிருஷ்ணநகர், நவ. 3

தேர்தல் பிரசாரம் பாகிஸ்தானில் ஓர் அபேட்சகரின் உயிரையே பலிகொண்டுவிட்டது.

ஜெஸ்ஸூர் ஜில்லா தொகுதி ஒன்றில் கையூம் கோஷ்டி முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த சந்த அலி என்ற வேட்பாளரைகன்வன்ஷென் முஸ்லிம் லீக் வேட்பாளரது ஆதரவாளர்கள் சில நாட்களுக்குமுன் கொன்றுவிட்டதாக 'டைனிக் பாகிஸ்தான்' என்ற தினசரி ஒன்று தெரிவித்துள்ளது.

— —

இணுவில் ப. நோ.

கூ. சங்க பிரச்னை

## அமைச்சரைச் சந்திப்பர்

உரும்பராய், புதன்

இணுவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உடுவில் கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு மத்திய நிலையமாக இருக்கவேண்டுமென வர்த்தகஅமைச்சரிடம் இன்று கோரவுள்ளனர்.

நியமன எம். பி. திரு. எம். ஸி சுப்பிரமணியம் தலைமையில் தூதுகோஷ்டி ஒன்று அமைச்சரைச் சந்தித்து வற்புறுத்தும்.

சுன்னாகம் பட்டினசபை, உடுவில் கிராமசபை பகுதிகளை இணைத்து, சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை மத்தியநிலையமாக தெரிவு செய்வது குறித்த ஒரு தகவல் அதிர்ச்சியை அளிப்பதாக இருப்பதாகவும் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மகஜரொன்றில் தெரிவிக்கப்படவுள்ளது.

இதுசம்பந்தமாக கூட்டுறவு ஆணையாளருக்கும் மகஜரொன்று அனுப்பப்பட்டுள்ளது.

இன்று திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில் இணுவில் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் சம்பந்தமாக அமைச்சரைப் பேட்டிகாணும் தூதுகோஷ்டியில் திரு. வி தர்மலிங்கம், திரு. வி. பொன்னம்பலம், திரு. எஸ். கே. துரைசிங்கம் ஜே பி, திரு. சி. விஸ்வலிங்கம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்,

...றது. கடைசித்தினமானஇம் மாதம் 5ம் திகதி மட்டும் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதுவரை 12 வட்டாரங்களிலும் போட்டியிட முன் வந்திருப்பவர்களின் பெயர்கள்வருமாறு: 1ம் வட்டாரம் திரு எஸ் நாகேசர், 2ம் வட்டாரம் திருவாளர்கள் ரி கே சுப்பிரமணியம், கே வேலும் பிள்ளை, 3ம் வட்டாரம் திருவாளர்கள் வேலுப்பிள்ளை கதிராமு ரி ராஜசிங்கம், வி வேலாயுதம், கு கேசவ நம்பி, 4ம் வட்டாரம் திருவாளர்கள் கணபதியார் சின்னத்தம்பி, சின்னையா ஆறுமுகம், நாகலிங்கம் துரை 8ம் வட்டாரம் திருவாளர்கள் கணபதிப்பிள்ளை சங்கரப்பிள்ளை, கதிர்காமர் வைரவிப்பிள்ளை கதிராமு. 9ம் வட்டாரம் திருவாளர்கள் தம்பு சிதம்பரப்பிள்ளை மயில்வாகனம் தம்பிமுத்து, இராமநாதன் கணபதிப்பிள்ளை, வி வைரமுத்து. கே கோவிந்தபிள்ளை, வி கணபதிப்பிள்ளை. 10ம் வட்டாரம் திருவாளர்கள் வி சுந்தரலிங்கம், பி பாப்பாணர், கே தியாகராசா. 11ம் வட்டாரம் திரு பி கே தியாகராசா. 12ம் வட்டாரம் திருவாளர்கள் எஸ் வைத்திலிங்கம், பி விஜயரட்ணம்.

(புலோலி. நிரு)

## புதுக்குடியிருப்பு கி. ச. தேர்தல் 20 பேர் போட்டி

புதுககுடியிருப்பு, செவ்.

புதுக்குடியிருப்பு கிராமசபைத் தேர்தல் நியமனப் பத்திரம் வவனியா தேர்தல் அதிகாரியால் கி. ச. மண்டபத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்டது. 7-ம் வட்டாரத்திலும் 4-ம் வட்டாரத்திலும் போட்டியிருக்கவில்லை. ஏனைய 8 வட்டாரங்களிலும் 20 பேர் பேட்டியிடுகின்றனர். விபரம்வருமாறு

1ம் வட்டாரம் கனகசபை செல்லையா, மார்க்கண்டு செல்லையா,

2-ம் வட்டாரம்: சின்னையா சிதம்பரப்பிள்ளை, சின்னையா குலசிங்கம்

3-ம் வட்டாரம்: எம். அருளம்மலம், ஐயம்பிள்ளை சிற்றம்பலம், இராசையா நாகராசா,

4-ம் வட்டாரம்: பொன்னையா பாலசிங்கம் (போட்டியில்லை)

5-ம் வட்டாரம்: செபஸ்தியாம்பிள்ளை ஞானப்பிரகாசம், யேமின் பிரான்சிஸ் சேவியர், எஸ். அல்வீனிப் பிள்ளை.

6-ம் வட்டாரம்: கே. பாலசிங்கம், க. சதாசிவம்

7-ம் வட்டாரம் சின்னத்தம்பி. வேலுப்பிள்ளை போட்டியில்லை.

8-ம் வட்டாரம்: ப. அருளானந்தம், யா. அலேஸ்

9-ம் வட்டாரம்: சூசை அந்தோனிமுத்து, செபமாலை சூசைப்பிள்ளை,

10-ம் வட்டாரம்; அ. ஸ்ரனிலாஸ், நல்லார் சதாசிவம் சங்கரப்பிள்ளை தம்பிராசா, அ. சந்தியா,

தேர்தல் இம்மாதம் 27-ம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

## கந்தஷஷ்டி

கிளிநொச்சி செவ்

கந்தஷஸ்டியை முன்னிட்டு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் தினமும் கந்தபுராணப் படிப்பு நடைபெறுகிறது.

—

## கிளிநொச்சி அமைப்பாளர்

கிளிநொச்சி, செவ்வாய்

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவில் கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையின் அமைப்பாளராக திரு எம். தியாகராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

......

## பாண்டியன்குளம் வைத்தியசாலை தரத்தை உயர்த்துக

முசலி, செவ்வாய்

நட்டான்கண்டல், பனங்காமம், இடாப்பிடித்த குளம், பூவரசன்குளம், இராமியன்குளம், சிருட்டிகுளம், ஆகிய பண்டைய கிராமங்களில் வசிக்கும் மக்களும், நவீன வவுனிக்குள குடியேற்றத்திட்டத்தில் 3ம் யூனிற்றில் வசிக்கும் மக்களும், தங்களுக்கண்மையில் ஒரு தரம் உயர்ந்த வைத்தியசாலை இல்லாத காரணத்தால் மிகவும் அவதியுறுகின்றனர். இவர்கள் பல மைல்களுக்கப்பால் உள்ள மல்லாவிக்குச் சென்று சிகிச்சை செபவேண்டியுள்ளது.

பாண்டியன்குளம் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் மத்திய வைத்தியசாலையின் தரத்தை உயர்த்தி இப்பகுதி நோயாளரின் கஷ்டத்தை நீக்குமாறு இப்பகுதி மக்கள் சுகாதார அமைச்சிடம் கேட்கவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உன்னால் பிறர்க்கு நன்மைசெய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு. அதுவே நீ செய்யும் பெரும் நன்மையாகும்.

— விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49, Jaffna: Telephone: 889

[illegible] சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 18-ந் திகதி (4-11-70)


## நாட்டுக்கும் சேரட்டும்!

ஐம்பது ரூபாய், பழைய நூறு ரூபாய் நோட்டுக்கள் இப்பொழுது சட்டப்படி புழக்கத்திலுள்ள நோட்டுக்களல்ல. அதாவது இந்த நோட்டுக்களைக் கொடுத்துப் பொருள்கள் வாங்கமுடியாது. ஆனாலும் இந்த நோட்டுக்களை வைத்திருப்பவர்கள் இம்மாதம் பதினைந்தாந் திகதிவரை வங்கிகளில், தபால்கந்தோர் சேமிப்புவங்கிகளில் ஏற்கனவே கணக்கு வைத்திருந்தால் போடலாம் அல்லது புதிதாகக் கணக்குத் திறந்தும் போடலாம். இந்தப் பணத்தைப் பற்றி அஞ்சத்தேவையில்லை. வருமானவரி கட்டாமலிருந்தால் விசாரணையின் பின் வருமானவரிப் பணத்தைக் கழித்துக்கொண்டு மிகுதிப் பணத்தைப் புதிய நோட்டுக்களாகப் பெறமுடியும். நியாயமாகத் தேடிய பணத்துக்குப் பயமில்லை.

சென்ற சில தினங்களில் வங்கிகளின் கியூவில் நின்று பலரும் தங்கள் ஐம்பது, நூறு ரூபாய் நோட்டுக்களைக் கொடுத்து அவற்றுக்குப் புதிய நோட்டுக்களைப் பெற்றிருக்கின்றனர். சிலர் வங்கிகளிலுள்ள தங்கள் கணக்கிலும் மற்றும் சிலர் புதிய கணக்குத் திறந்தும் பணம் போட்டுள்ளனர்.

ஆனாலும் இன்னும் பெருந்தொகையான பழைய நோட்டுக்கள் வங்கிகளுக்கு வந்து சேரவில்லை. இம்மாதம் பதினைந்தாம் திகதிக்குள் இப் பணத்தை வங்கிகளிலோ தபாலகந்தோர் சேமிப்பு வங்கிகளிலோ போடாவிட்டால் அந்தப் பணத்தினால் யாருக்கும் நன்மையில்லை; சேர்த்துப் பதுக்கி வைத்தவர்களுக்கும் பயனில்லை; நாட்டுக்கும் நன்மையில்லை.

பதினைந்தாம் திகதி வரை பணத்தைப் போடுவதற்கு அவகாசமளிக்கப்பட்டிருக்கிறது; ஏன் வருமானவரி கட்டவில்லையென்று கேட்கப் படமாட்டாது என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அரசாங்கம் அளித்துள்ள நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி சரியாகவோ, தவருகவோ பணத்தைச் சேமித்துவைத்திருப்பவர்கள் இனியும் தாமதம்செய்யாமல் அவற்றை வங்கிகளிலோ சேமிப்புவங்கிகளிலோ போடுவதுதான் விவேகம். யாருக்கும் உதவாமல் போவதைவிட தமக்கும் நாட்டுக்கும் உதவச்செய்யவேண்டும்!

## வர்த்தகக் கல்வி

தமிழில் வர்த்தகக் கல்விபெற்ற மாணவர்கள் பட்டதாரிகளாவதற்கு இப்போதுள்ள நான்கு பல்கலைக்கழகங்களில்ஒன்றிலேனும் வசதி செய்யப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில்வர்த்தகக் கல்வியில் உயர்வகுப்பில் சித்தியடைந்த மாணவர்களிற்சிலர் வர்த்தகக் கல்வியில் பட்டம் பெற வாய்ப்பின்றி செய்வதறியாமலுள்ளனர்.

சமீபத்தில் யாழ் மத்திய கல்லூரியில் வர்த்தகக் கல்விப் பொன்விழாக் கொண்டாட்டத்தில் செய்துவைத்துப் பேசிய கிழக்கிலங்கைக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு கே. வி. தங்கராசா வர்த்தகக் கல்வியின் பயனையும் அவசியத்தையும் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

வர்த்தகக் கல்வி பலருக்கு வேலைவாய்ப்பைத் தேடித்தரும் கல்வியுமாகும். அரசாங்க உத்தியோகத்தை மட்டும் நம்பியிருக்கச் செய்யாததுமாகும்.

கொழும்பிலுள்ள பிரிவிஞ பல்கலைக்கழகமொன்

ஆட்சி மன்றத்திலே . . .

நமது நிருபர்
பெரி சுந்தரலிங்கம்

# முதலாளித்துவ சக்திகளை அடக்க "மக்கள் இராணுவம்"

என்.எம் மின் வரவு-செலவுத்திட்டம் நாட்டிலே, மக்கள் மத்தியிலே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள போதிலும், ஆட்சிமன்றத்தினுள்ளே, மக்கள் பிரதிநிதிகளுக்கு மத்தியிலே அந்தளவுக்குப் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை.

ஏன் இப்படிச் சொல்கின்றேனென்றால், வரவு-செலவுதிட்ட விவாதத்தின்போது அடக்கிவைத்திருக்கும் ஆத்திரத்தையெல்லாம் அரசாங்கத்தின்மீதும், அமைச்சர்கள் மீதும் அள்ளிக்கொட்டித் தீர்த்துக்கொள்வது 'பிரிட்டிஷ் வெஸ்ட்மினிஸ்டர்மொடல்' பாராளுமன்ற சம்பிரதாயம்; பாரம்பரியமான வழக்கம்.

ஆனால் இந்தமுறை வரவு-செலவுத்திட்ட விவாதம் ஆரம்பத்திலேயே காற்று வெளியேவிடப்பட்ட பலூன போல கட்டைவண்டிவேகத்தில்தான் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்க்கட்சியினர் பலமில்லாதது ஒருபக்கம் அரசாங்க எம். பி.க்களின் பூதாகரமான பெரும்பான்மை இன்னொரு பக்கமுமாக, 'எதைச் சொல்லி என்ன பயன்? நடக்கிறது நடக்கத்தானே போகிறது' என்ற ஒருவகை விரக்தி மனப்பான்மை குடிகொண்டுள்ளதோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

எதிர்க்கட்சியில் இருப்பதே இரண்டு மூன்று கட்சிகள் தாம் யூ. என். பி.யில் ஜே ஆர். மட்டும்தான் வழக்கம்போல, சபை நடவடிக்கைகளில் ஆரம்பமுதல் இறுதிவரை அன்றாடம் கலந்துகொள்கிறார். வழமையாக சபையில் ஆரம்பமுதல் இறுதிவரை காணப்படும் தமிழரசுக்கட்சி எம். பிக்கள் திருவாளர்கள். கா. பொ. இரத்தினம், எஸ். ஜே. வி. செல்வநாயகம், நிக்கவரட்டிய எம். பி. முதியான்சே தென்னக்கோன், காலி எம். பி. தகநாயக்கா ஆகியோரைக்கூட இப்போது அவ்வளவாகக் காணக்கிடைக்கும் சந்தர்ப்பம் இப்படியான விவாதங்களின்போதுதானே கிடைக்கிறது.

புதிதாக வந்துள்ள எம். பிக்களுள் இரத்னபுரி எம். பி. திரு. நந்தா எல்லவெல்ல எல்லாவகையிலும் முக்கியத்துவம் பெற்றவராக விளங்குகிறார்.

தேர்தல் காலத்தில் "கால் பேஸ் திடலில் கட்டி வைத்துத் தோலுரிக்க வேண்டும்" என்று சொல்லி பெரும் அரசியற் பூகம்பத்தைக் கிளப்பிவிட்டவர் இவர். தேர்தல்முடிந்த பின்பும் இவருடைய தேர்தல் ஆட்சேபனை வழக்கு சம்பந்தமாக சட்டமொன்று கொண்டுவந்து நிறைவேற்ற முற்படுகையில்தான் செனட் சபை அதனை எதிர்த்து வாக்களித்துத் தூக்கியெறிந்தது. ஆட்சிமன்றத்துக்கும் செனட்சபைக்கும் 'லடாய்' ஏற்படக் காலாயிருந்தவர் மட்டுமல்லாமல், அதன் வழி செனட்சபையின் ஆயுளுக்கே எமனாகவும் வந்தவர் இவரே!

ஆட்சிமன்றத்தில் உள்ள இளைய பரம்பரையினரில் முக்கியமானவர்; பேச்சு வன்மை மிக்கவர்; ஆளும் அழகானவர்தான்!

'இந்த "எல்லாவல்ல பிரலாபம்" எல்லாம் ஏன்என்று யோசிக்கிறீர்களா?

இன்றைய விவாதத்தில் இறுதியாகப் பேசியவர் இவர்தான். என்றாலும் முதலிடத்தைத்தட்டிக்கொண்டு விட்டார்.

காலை 10 மணியிலிருந்து பேச்சு மழையில் நனைந்து தெப்பமாகிக் களைத்துச் சோர்ந்துபோயிருந்த எம். பி.க்களும் உற்சாகமாக, எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து காதைத்தீட்டிக் கொண்டு, ஆவலுடன் "இன்னும் பேசுங்கள்; இன்னும் பேசுங்கள்" என்று உற்சாகப்படுத்தும் அளவுக்கு கம்பீரமான குரலில் அருமையான தொடர் சொற்பொழிவை நிகழ்த்தினார் திரு நந்தா எல்லவல்ல.

தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றனர் மக்கள். எனவே மக்களிடமிருந்து விலகிச் செல்லாமல் அவர்களையும் நாட்டைக் காக்கும் நல்ல பணியில் இணைத்து அழைத்துச் செல்லுங்கள்" என்று ஆட்சியாளரிடம் கேட்டுக்கொண்ட நந்தா எல்லாவல்ல, அதனை எப்படிச் செய்யலாம் என்பதனையும் சொன்னார்.

கியூபா, சீனா போன்ற புரட்சிகர நாடுகளிலே நடைமுறையில் உள்ளதைப் போல் மக்களில் ஒவ்வொருவருக்கும் ஆயுதம் தாங்கிப் போரிடப் பயிற்சியளிக்க வேண்டும் எனவே "மக்கள் இராணுவம்" ஒன்று அமைக்கவேண்டும் என்பது தான் திரு நந்தா எல்லவல்லவின் யோசனை.

ஐந்தாண்டுக்கொரு தரம் கிளித்தட்டு விளையாடுமாப் போல் யூ. என். பி. மாறி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாறி யூ என். பியும் வருவதில் மக்களுக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை. இந்தப் 'பருவமாற்றங்கள்' மக்களுக்கு எந்தவிதப் பயனையும் அளிக்காது என்பது எல்லவல்லவின் உறுதியான வாதம்.

"இந்த நாட்டிலுள்ள எல்லா அரசியற் கட்சிக்கும் ஆட்சிபீடத்தில் அமர சந்தர்ப்பம் அளித்து மக்கள் சலித்துப் போய்விட்டார்கள். இந்தமுறை மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் கொடுத்து அனுப்பியுள்ளனர், எனவே இனிமேல் இன்னொரு தரம் வாக்குச்சாவடிக்குச் சென்று யாருக்கும் புள்ளடி போட மக்கள் தயாராக இல்லை"- திரு. எல்லவல்ல திட்டவட்டமாகத் தெரிவித்த கருத்து இது.

எனவே தான் முதலாளித்துவ சக்திகள் இந்த நாட்டில் இனிமேல் எக்காலத்துக்கும் தலைதூக்க விடாமல் கண்ட கண்ட இடங்களில் எதிர்த்துப் போரிட மக்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கவேண்டும். ஆகவே 'மக்கள் இராணுவம் அத்தியாவசியம்' என்று முடித்த எல்லவல்ல இறுதியில் 'முதலாளித்துவ ஏஜண்டுகளைக் கால்பேஸ் திடலில் கட்டி வைத்துத்தோலுரிக்கத்தான் வேண்டும்' என்று குறிப்பிட்டபோது அமைச்சர் ஆரியதாசா 'பழைய கதையை இன்னும் விடவில்லையா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார்.

திரு. எல்லவல்ல பேசி முடிந்த பின்னும், "இன்னும் பேசலாமே" என்று அரசாங்க எம் பி.க்கள் கைதட்டலுக்கிடையே கூறினார்கள் என்றால் எல்லவல்லவின் பேச்சுத் திறன்தான் என்னே!

வழக்கமாக இரவு எட்டு மணிக்கு முடியவேண்டிய கூட்டம், எதிர்க்கட்சியினரின் அனுமதியுடன் 6 மணிக்கே ஒத்திவைக்கப்பட்டது. பேசுவதற்கு ஆளில்லை போலும்!

இன்று முருகாலயங்களில் சூரசம்ஹாரம்

## சூரபத்மனுக்கு வந்த திடீர் ஞானோதயம்

'இறந்திட வரினும் அல்லால் இடுக்கண் ஒன்றுறினும் தம்பால்
பிறந்திடு மானம் தன்னை விடுவரோ பெரியர் ஆனோர்?
சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பியானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை சூரன் என்றொரு பேர் பெற்றேன்."

## ஐயாறன் எழுதுவது...

சென்ற அக்டோபர்மாதம் 2-ம் திகதி காந்தி ஜயந்தியன்று சேவாக்கிராமத்திலே ஆசார்ய விநோபாபாவேயை நேரில் சந்தித்து அவரது அமிர்தமகோற்சவம் (75-வது ஜயந்தி விழாவை ஒட்டி) ரூ. 60 லட்சம் வசூலித்து, 'கிராம சுயராஜ்'ய நிதிக்காக அவரிடம் பலஅன்பர்கள் காணிக்கை செலுத்தினர். அதைப்பற்றி ஓர் அன்பர் சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் உணர்ச்சியுடன் எழுதியுள்ளார்.

அன்று அப்பெரியாரைப் பார்த்தது எங்கள் பாக்கியம் ஆசார்யாவின் உடல்நிலை பலவீனமாக இருப்பினும் அவர் மனோவலிமை மேலாகவுள்ளது. அவரைப் பார்க்க வந்தவர்களிடம் உருக்கமாகப் பேசினார். 'மகாத்மா என்னைப் பெரிதும் பாராட்டிப் பேசியுள்ளார். அப்பாராட்டுக்குத் தகுதியாக நான் என்ன செய்துவிட்டேன். இது மகாத்மாவின் பெருந்தன்மையையே காட்டுகிறது' என்று கண்கலங்கிக் கூறிவிட்டு, நம்நாட்டில் ஏன் பலாத்கார இயக்கம் பரவிவருகிறது? மகாத்மா நமக்காக வாழ்ந்ததெல்லாம் வீண்தானா? மகாத்மாவின் பரிசுத்தமான ஒரு சிஷ்யரான ஜயப்பிரகாஷ் நாராயணனுக்கு ஏன் பயமுறுத்தல் கடிதங்கள் வர வேண்டும்? இந்த பலாத்காரத்தையும், சட்டவிரோதங்களையும் நம்மால் தடுக்க முடியாவிட்டால், காந்திஜியைப் பின்பற்றுபவரென்று நாம் நம்மை எப்படிக் கூறிக்கொள்ளமுடியும்?' என்று உள்ளம் வெதும்பக் கேட்டார்.

மகாத்மா பிறந்த இந்தியாவிலேயே நிலைமை இப்படியாயின், நம் இலங்கையிலே அவரது அகிம்சா உபதேசங்கள் பின் பற்றப்படுமா? இங்கு மகாத்மாவின் நெறிகளைப் பரப்புவதற்காக 'ஞாபக டிரஸ்ட்' கவர்னர் ஜெனரல் மாளிகையில் அமைக்கப்பட்டதே. அதனால் ஏதும் பயன் கிடைக்குமா? என்று அங்கு வந்திருந்த ஓர் அன்பரைக் கேட்டேன். 'இலங்கையிலும் பலாத்காரம் பரவுகிறதென்றாலும், சிறிய இலங்கையில் நிலைமையைச் சமாளிப்பது அதிக சுலபமாகும் இலங்கை சிலவிதங்களில் இந்தியாவும் அவரது உபதேசங்களைப் பரப்பவும், அவற்றைப் பின்பற்றி ஊக்கமளிக்கவும் உலகமக்களிடையே அமைதியையும். சமரசத்தையும் பரப்பும் ஸ்தாபனங்களுடன் ஒத்துழைக்கவும் வேண்டுமென்பது இந்த டிரஸ்ட்டின் நோக்கம். பெரிய பெரிய சட்டமூளைகள் அங்கு கூடியிருந்தன. டிரஸ்ட் சபைக்குப் பலரும் அக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டதும், அச்சபையைப் பதிவு செய்வது பற்றி சட்டநிபுணர்களிடையே பெரிய வாக்குவாதம் எழுந்தது. பதிவு வேலைகளுக்காக இக்கூட்டம் ஐவரடங்கிய ஒரு குழுவுக்கு அதிகாரமளிக்க வேண்டுமென்றார் முன்னாள் நீதியரசர் பெர்னாண்டோ. புரக்டர் கொரியா இது தேவையில்லை என்றும், தெரிவுசெய்யப்பட்ட டிரஸ்ட் சபையினரே பதிவு செய்ய முயற்சிக்கலாமென்றார். வாக்குவாதம் சூடுகண்டது. சட்ட அறிஞர் சாக்ஸியின் கருத்தை ஒருவர் கேட்டார். தமக்கு முன் அறிவித்தல் தேவை என்றும் சட்டப்புத்தகங்களைப் பார்க்கவேண்டும் என்றும் பலத்த சிரிப்புக்கிடையே கூறினார். அரைமணிநேர வாக்குவாதம் நடந்தது. டி எஸ் பெர்னாண்டோ ஆணித்தரமாக அடித்துப் பேசியபின் அவர் கூறியதை எல்லாரும் ஒப்புக்கொண்டனர், ஒரு சிறிய விஷயம்கூட சட்டமேதைகளின் கையில் என்னபாடுபடுகிறதென்பதைக் காணக்கூடியதாக இருந்தது.

அங்கு பல லட்சப் பிரபுக்கள் கூடியிருந்தனர், ரூ 47 ஆயிரம் அவர்களுக்குச்சிறிய தொகை, இதற்காகவே ஒரு பெரிய டிரஸ்ட் என்று தோன்றக்கூடும். ஆனால் பலம் வாய்ந்த இந்தடிரஸ்ட் சபை ஏற்படுத்தப்பட்டுள்ளதால், இதன் ஆதரவில் பல நல்லகாரியங்கள் இங்கு நடைபெற முடியும். இந்தியா முதலிய வெளிநாடுகளிலிருந்து பல தலைவர்களும், கலைஞர்களும் வரவழைக்கவும் இனி அதிக வாய்ப்பிருக்கும், பிரபலஇந்திய கலைஞர்களை வரவழைத்தால் பணவசூலுக்கு என்ன பஞ்சம்? இந்தப் புதிய ஸ்தாபனத்தின்மூலம் இங்கு பல பெரிய பணிகள் நடைபெற முடியுமென்ற நம்பிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வாய்ப்பின்றி செய்வதறியாமலுள்ளனர்.

சமீபத்தில் யாழ் மத்திய கல்லூரியில் வர்த்தகக் கல்விப் பொன்விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட தொழில் நுட்பக் கல்விப் பகுதி டைரக்டர் பேசுகையில் வர்த்தகக் கல்விப் பட்டப் படிப்புக்கு வழிவகுப்பதற்குத் தாம் முயற்சி செய்வதாகக் கூறிச்சென்றார். இந்த விழாவில் யாழ் மத்தியகல்லூரியின் முதல் வர்த்தகக் கல்விப் போதனாசிரியராகவிருந்த கலைப்புலவர் திரு க. நவரத்தினத்தின் உருவப் படத்தை திரைநீக்கம் ... யோகத்தை மட்டும் நம்பியிருக்கச் செய்யாததுமாகும்,

கொழும்பிலுள்ள பிரிவினு பல்கலைக்கழகமொன்றில் சிங்களத்தில் வர்த்தகக் கல்வி கற்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த வய்ப்பு வர்த்தகக் கல்விகற்கும் தமிழ் மாணவர்களுக்கும் கிடைக்கச் செய்யவேண்டியது நியாயம். பேராதனைப் பல்கலைக்கழகம் அல்லது கொழும்புப் பல்கலைக் கழகத்தில் வர்த்தகக் கல்விப் போதனைக்கு வழிசெய்ய கல்வி அமைச்சும அரசாங்கமும் முன்வரவேண்டும்.

# 'ஈழநாடு' றமழான் குரலொலி



''மானிடனுக்கு ஓர் துன்பம் ஏற்பட்டுவிட்டால் அவன் (அஞ்சி ஒடுங்கி) தன் இறைவனிடம் பிரார்த்தனை புரிகின்றான். பின்னர் அ(வனுக்கு ஏற்பட்ட துன்பத்)தை நாம் இன்பமாய் மாற்றிவிட்டதும் இவன் முன்பு எவனிடம் மண்டியிட்டு (அழுது புலம்பி) பிராத்தித்தானோ அ(வ்விறை)வனை மறந்துவிடுகின்றான்''

## (சதகல்லாஹுல் அழீம்)

(கலாமுல்லாஹ்: 39-ம் அத்தியாயம் 8-ம் வசனம்) துலக்கேற்படும் மிடிமை தன்னை விட்டகலும் வரை தற்காலிகமாக ஒருவன் தவத்தை தனக்குள்ளாக்கிக்கொண்டால் அது இறை பக்தி (தக்வா) ஆகாது. இறை பக்தி எப்போதும் இருதயத்தோடு இணைந்தே இருக்கவேண்டியது.

படைப்பினுள் சிறந்தவன் மானிடன் என்பதும் நாயின் ஈரம் நஜீஸ் (அசுத்தம்) என்பதும் இஸ்லாத்தின் போதனை என்றைக்கோ ஒரு நாள் எச்சிலை வீச, அதை நக்கிக்கொண்ட நாய் இறக்கும் வரை எச்சிலை வீசியவன் முன் செவிகளைத் தாழ்த்தி வாலினை ஆட்டி தன் நன்றிக் கடனை காண்பிப்பதை நாம் காண்கிறோம்,

என்றும் அருள் புரிந்து கொண்டே இருக்கும் அல்லாஹ்வின் முன் தற்காலிக வணக்கம் செய்து தரித்திரம் போக்கிக்கொண்டவன் இந்நாயினும் கேவலமானவன் என்றுரைக்காமல் வேறென்ன கூறலாம்?

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹஸன் [கபூரி]

**தொழுகை நேரங்கள் :-**

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-38 | 5-58 | 12-20 | 3-17 | 5-52 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-12 | 4-23 |

...நிகவரட்டிய எம். பி. முதியான்சே தென்னக்கோன், காலி எம். பி. தகநாயக்கா ஆகியோரைக்கூட இப்போது அவ்வளவாகக் காணக்கிடைக்கவில்லை! பெரும்பான்மையான நேரங்களில் எதிர்க்கட்சி எம். பி.க்களே இல்லாமல், முழுக்க முழுக்க அரசாங்கக்கட்சி எம். பி.க்கள்தான் சபையில் காணப்படுகின்றனர்.

இப்படியாக வெறிச்சோடிக்கிடக்கும் ஆட்சிமன்றத்திலே வரவு-செலவுத்திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதம் இன்று நடைபெற்றபோது வழக்கமான கேள்வி நேரத்தின்போது காலி எம். பி. திரு. டபிள்யு தகநாயக்கா அரசாங்கத்தின் தங்கம், வெள்ளி, விற்பனை விலைபற்றி முக்கியமான கேள்வியொன்றைக் கேட்டார். பதுக்கல் பண வேட்டையைத் தொடர்ந்து தங்கக்கட்டுப்பாடு வருமோ? என்று பலரும் தலையைப் போட்டு உடைத்துக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் 'தகா'வின் கேள்விக்கு என். எம் மின் பதிலை பத்திரிகையாளர்களாகிய நாங்கள் ஆவலுடன் எதிர்பார்த்தோம்.

அரசாங்கம் ஒரு அவுன்சுத் தங்கத்தை 220-09 சதத்துக்கு வாங்கி, அவுன்சொன்று 500ரூபாய்க்கு விற்பதாகச் சொன்ன டாக்டர் என், எம். தங்கத்தின் விற்பனை விலையைக் குறைத்து நகைக்கடை முதலாளிகளின் லாபத்தைக்கூட்ட விரும்பவில்லை என்றார்.

சிக்கனமாக வாழவேண்டுமானால் எல்லா வழிகளிலும் சிக்கனமாகத்தான் வாழவேண்டும். அரைகுறையாக எதையும் செய்யமுடியாது தங்கம், வெள்ளி ஆபரணங்களை மக்கள் உபயோகிப்பதற்கு ஊக்கமளிக்க நான் விரும்பவில்லை. தங்கம், வெள்ளி நகைகளை உபயோகிக்கவிரும்புவோர் அதிக விலைதான் கொடுக்கவேண்டும் என்றார் என். எம்.

தங்க விற்பனையிலிருந்து அரசாங்கம் பெற்ற லாபம் ஆண்டுவாரியாகப் பின்வருமாறு கூறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1965 | ரூபா | 17,493,58 |
| 1966 | ரூபா | 13,686,86 |
| 1967 | ரூபா | 18,887,18 |
| 1968 | ரூபா | 18,891,22 |
| 1969 | ரூபா | 33 382,70 |
| 1970 | ரூபா | 20,490,39 |

கேள்வி நேரத்தின் பின் விவாதம் ஆரம்பமாகிய போது அரசாங்கத்தரப்பு பின்வரிசை எம். பி.க்கள் தான் ஒருவர் பின் ஒருவராக சொல்மாரி பொழிந்தனர். புதிதாக வந்து சேர்ந்த எம். பி.க்களுக்குச் சரியான அளவுக்கு கம்பீரமான குரலல அருமையானதொரு சொற்பொழிவை நிகழ்த்தினார் திரு நந்தா எல்லவல்ல.

பத்து ரூபாய்க்கும், 20 ரூபாய்க்கும் மயங்கி, வங்கிகளின் முன்னே வரிசையில் நின்று, பதுக்கல்காரர்களின் பணத்தை மாற்றிக்கொடுக்க சில ஏழைகளும் பங்கு கொண்டுள்ளதை எடுத்துச்சொல்லி, 'தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் செய்யும்' இவர்களின்- ஏழை மக்கள் சிலரின் நடவடிக்கைகளுக்காக வெட்கப்பட்டார்; வேதனைப்பட்டார் திரு. நந்தா எல்லாவல்ல.

''பணக்காரர்கள் இனிமேல் பெறுவதற்கு எதுவுமே இல்லை; ஏழைகளுக்கோ பெறுவதற்கு முழுஉலகமே இருக்கிறது. பணக்காரர்கள் இனிமேல் எல்லாவற்றையுமே இழப்பார்கள்; ஏழைகளோ இனிமேல் எதையுமே இழக்க மாட்டார்கள்''

என்பதை அடிநாதமாக வைத்துக்கொண்டு, புரட்சிகரமான மொழியிலும், பாணியிலும், தீவிரமான தனது கருத்துக்களைத் தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்துக்கூறினார் திரு. நந்தா எல்லவல்ல.

தேர்தல் களத்திலே பிற்போக்குவாதிகள், முதலாளித்துவவாதிகள் படுதோல்வியடைந்துவிட்ட போதிலும். முக்கிய அரசாங்க அலுவலகங்களின் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய கேந்திர ஸ்தானங்களிலும் முதலாளித்துவ வாதிகளின் ஆட்சிதான் இன்றும் நடைபெறுவதாக வர்ணித்த எல்லவல்ல, ''முதலாளித்துவவாதிகளும் அவர்களது ஏஜண்டுகளும் குட்டக் குட்டக் குனிவதைப்போல பாசாங்கு காட்டிக்கொண்டு ஆட்சிமன்றத்தில் கொண்டு வரப்படும் ஒவ்வொரு சட்டத்துக்கும் கையை உயர்த்தி வாக்களித்து ஆதரவளித்தாலும், மக்கள் அரசாங்கத்தை வீழ்த்த ஒவ்வொரு க்ஷணமும் தக்க சந்தர்ப்பத்தைத்தான் அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்து விடக்கூடாது'' என்று எச்சரித்தார்.

''தேர்தல் தினத்தன்று வாக்களித்துவிட்டு, வாக்களித்ததோடு தங்கள் கடமை முடிந்ததென்று வாளாவிருக்க மக்கள் விரும்பவில்லை. தாங்கள் நிறுவிய ஆட்சியை எதிரிகளிடமிருந்தும், ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்தும் காப்பாற்ற எதனையும் செய்ய...

...பிறந்திடு மானம் தன்னை விடுவரோ பெரியர் ஆனோர்?
சிறந்திடும் இரண்டு நாளைச் செல்வத்தை விரும்பி யானும்
துறந்திடேன் பிடித்த கொள்கை சூரன் என்றொரு பேர் பெற்றேன்.''

தம்பியராகிய சிங்கமுகன் முதலானோரும், அருமை மைந்தனாகிய பானுகோபனும் எவ்வளவோ புத்திமதிகளை எடுத்துக் கூறுகிறார்கள். ''நீ சிறைபிடித்த வானவர்களைவிட்டுவிடப்பா அப்பொழுது முருகன் உன்மீது போர் தொடாது நம் நாட்டை விட்டு அகன்று விடுவான், நீ இன்னும் பல காலத்துக்குச் செங்கோல் ஓச்சலாம்'' என்று கெஞ்சினார்கள்

சூரபத்மன் ஒன்றுக்கும் அசைந்து கொடுக்கவில்லை. அவர்கள் சொல்வதைக் கேட்டுச் சீறிப் பொங்கினான். ''என்ன வார்த்தை பேசினீர்கள்! சிவபெருமானிடம் அழியாவரம் பெற்ற என் முன்னே இச்சிறு பாலன் எம்மாத்திரம்! வானவரை விடுதலை செய்தேனேயாகில் என்னை யார் மதிக்கப்போகிறார்கள்? இரண்டு நாள் செல்வத்தை விரும்பி யான் பிடித்த கொள்கையைத் துறப்பதா? அது ஒருபோதும் முடியாத காரியம் சூரன் என்று சும்மாவா பேர் எடுத்தேன்?

அவனுடைய அதிகாரப் பித்தும், ஆணவச் செருக்கும் இவ்வாறு கூறத் தூண்டுகின்றன. தூய சிந்தனைகளை மறைத்து மூளைக்குத் திரை போட்டுவிடும் அளவு கடந்த அக்கிரமமும், ஆணவமும் எக்காலத்திலும் அழிவுக்கே அடிகோலும் என்பது சூரன் போர் கற்பிக்கும் படிப்பினை.

தம்பியரும் மைந்தரும், சேனைகளும், சுற்றத்தாரும் இறந்துபட்டுப்போக சூரபத்மன் போர்க்களத்தே தனித்து நிற்கிறான். அப்பொழுது அவனுக்கு ஒரு திடீர் ஞானோதயம் ஆகிறது. ''விட்டேனோ அச்சிறுவனை! ஒரு கைபார்த்தே தீருவேன்'' என்று இறுமாப்புடன் கூறியவன் இப்பொழுது மனம் மாறி வேறொரு சுருதியில் பாடுகிறான்.

மேலேயுள்ள பாடலுக்கும் பின்னால் வரும் பாடலுக்குமுள்ள பெரும் வித்தியாசத்தைப் பாருங்கள்.

'கோலமா மஞ்ஞை
தன்னில் குலவிய
குமரன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன்,
அந்நாள், பரிசிவை
உணர்ந்திலேன் யான்
மாலயன் தனக்கும் ஏனை
வானவர் தமக்கும்
யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற
மூர்த்தி இம்மூர்த்தி
யன்றோ!

சூரபத்மன் பலவித மாயா ரூபங்களில் தோன்றி முருகவேளுடன் போர்புரிந்தான். இந்திரன் போல் வந்து தந்திரம் செய்தான். தேவரைப் போலவும், மூவரைப் போலவும் வந்தான். இயமனைப் போலவும் வந்தான். இறந்துபோன அவன் தம்பிமார்களாகிய சிங்கமுகன் ஆகியோரைப் போலவும் வந்தான் முருகப்பெருமானின் படைக்கலங்கள் அந்த மாயா ஜாலங்கள் எல்லாவற்றையும் தகர்த்தெறிந்தன.

அவருடைய நெஞ்சில் கருணை சுரந்தது. சூரபத்மனுக்கு இன்னுமொரு சந்தர்ப்பம் கொடுப்போம் என்று நினைத்தார். உடனே எவராலும் காணமுடியாத தமது அழியாத பேருருவத்தில் சூரன் முன் தோன்றினார். அந்தத் திவ்ய சொரூபத்தில் அண்டங்கள் யாவும் அடங்கியிருப்பதைச் சூரபத்மன் கண்டான். தேவர்களும், முனிவர்களும், அசுரர்களும், அவுணர்களும் அதற்குள் ஒடுங்கியிருந்தார்கள். வேதாகமங்களும் சகல சாஸ்திரங்களும் அதில் காணப்பட்டன. தத்துவம் கடந்த அந்தப் பரம்பொருளைக் கண்டதும் சூரபத்மனுக்குச் சண்கள் கூசின. பேராச்சரியத்தில் ஆழ்ந்தான், சற்று நிதானித்து அந்த ஒளிமயமான திருவுருவத்தை மறுபடியும் மறுபடியும் நோக்கினான்,

முருகப்பெருமானின் அருளால் அவனுக்கு நல்லுணர்ச்சி ஏற்பட்டது. சொற்ப நேரத்திற்கு ஞானோதயம் பெற்றான். ''அடடா என்ன அற்புதம்! என்ன அழகு! என்ன முருகு! இப்படிப்பட்ட பெருமானோ என்னுடன் போருக்கு வந்தது நான் செய்த பூர்வ புண்ணியம்தான்'' என்று வியந்தான் வீரபாகு தேவரும், சிங்கமுகனும், மகன் இரணியனும் ''முருகனைக் குழந்தை என்று நினைக்காதே. முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தான் இந்தக் கோலத்தில் வந்திருக்கிறார்'' என்றி கூறியதன் உண்மையை இப்பொழுதுதான் உணர்ந்தான் அவனுடைய ஆணவம் அடங்கியது. அகங்காரம் ஒடுங்கியது. ஒரு குற்றமும் செய்தறியாத இந்திராதி தேவர்களைச் சிறையில் வைத்தது தவறு என்பதை உணர்ந்தான்.

''அழகான மயிலின் மீது வந்த குமரனைக் குழந்தை ... பலாத்காரம் பரவுகிறதென்றாலும், சிறிய இலங்கையில் நிலைமையைச் சமாளிப்பது அதிக சுலபமாகும் இலங்கை சிலவிதங்களில் இந்தியாவுக்கு நல் வழிகாட்டியுள்ளதுபோல் இவ்விஷயத்திலும் காட்டலாம்' என்றார் அவர்.

மகாத்மாகாந்தியின் நூல்களைப் படிக்கவும், ஆராய...

என்றல்லவா நினைத்துவிட்டேன். மகாவிஷ்ணு, பிரமதேவன் முதலிய வானவர்க்கும், பிறர்க்கும், எல்லோருக்கும் மூலகாரணமாய் விளங்குகின்ற மூர்த்தியிலும் மூர்த்தியன்றோ இவர்'' என்று வருந்திச் சற்று நேரம் அப்பெருமானை வணங்கி நின்றான்.

ஆனால் சற்றுநேரத்துக்குத்தான் அடுத்த கணம் அவனுடைய அகங்காரம் மறுபடியும் கொதித்தெழுந்து அவனுடைய புத்தியை மயக்கிவிட்டது. 'இவ்வளவும் போர் புரிந்துவிட்டு இனிமேல் மனம் தளருவதா? சீச்சீ. வணங்கா முடியனாய் தனியரசு செலுத்தி வந்த நான் இனிமேல் தலைபணிவதென்றால் என்னுடைய வீரமும் புகழும் எங்கே?' என்று எண்ணலானான். அவனுக்கு சற்றுநேரம் தோன்றிய மெய்யறிவை மறுபடியும் ஆணவமலம் வந்துமறைந்துவிட்டது. 'வாழுதல் வேண்டும், நெஞ்சம் தடுத்தது மானம்ஒன்றே' என்கிறான்.

இந்த நினைவு அவனுக்கு உண்டானதும் முருகப்பெருமானுடைய பேருருவம் உடனே மறைந்துவிட்டது. மறுபடியும் மயில்மீதேறிய பிள்ளையாகவே சூரனுக்கு காட்சியளிக்கிறார் முன்னிலும் பார்க்க வெகு தீவிரமாக சூரன்போர் புரிகிறான். முருகவேள் தமது ஞானசக்தியாகிய வேற்படையை நோக்கி 'இருள் மயமாய் நிற்கும் சூரனுக்கு ஒளி பெருக்கி அவனை சம்ஹாரம் செய்து வா' என்று அனுப்பினார். அவ்வேலாயுதமானது அவ்வண்ணமே சூரபத்மனுடைய உடலை இரு கூறாகப் பிளக்க அவன் மீண்டும் மெய்யுணர்வு பெற்று சேவலும் மயிலுமாகி முருகப் பெருமானின் சேவடிகளை வந்தடைந்தான்.

சூரனுக்கு ஏற்பட்டது போலவே எமக்கும் சிற்சில சமயங்களில் கடவுள் மெய்யுணர்வு கிட்டியபோதிலும் ஆணவமலங்கள் என்ற மாயை வந்து அதை மூடி மறைத்து விடுகிறது

பாலா.

...தால் பணவசூலுக்கு என்ன பஞ்சம்? இந்தப் புதிய ஸ்தாபனத்தின்மூலம் இங்கு பல பெரிய பணிகள் நடைபெற முடியுமென்ற நம்பிக்கையுடன் திரும்பினேன்,

0 0 0

சென்ற அக்டோபர் 2-ம் திகதியன்று சேவாக்கிராமத்தில் நடந்த சில ருசியான வைபவங்களைப்பற்றிய விபரம் 'ஹிந்து பத்திரிகையில் வெளியாகியுள்ளது. சுமார் 5000 சர்வோதய ஊழியர்கள் அங்கு கூடியிருந்தனர். 18 மாணவிகளும் 42 மாணவர்களும் பல தமிழகக் கல்லூரிகளிலிருந்து வந்திருந்தனர். மகாத்மா பற்றிய கட்டுரைப் போட்டியில்பரிசு பெற்றவர்களே இந்த அதிர்ஷ்டசாலிகள்,

சேவாக்கிராமத்தில் காந்தியின் எளிய 'குடில்' ரூ 100 செலவில் கட்டப்பட்டது. அதை மாணவர்கள் வலம் வந்து தரிசித்தனர். அந்தக் குடிசையில் சுவரிலே இயேசு கிறிஸ்துவின் படமும், சத்தியத்தைப் பற்றி ரஸ்கின் கூறிய வாக்கு அடங்கிய ஒரு படமும் தொங்கவிடப்பட்டிருந்தன.

தமிழ் மாணவர்களைக் கண்டதும் ஆசார்யவினோபா திருவாசகம் பாடச் சொன்னார் ''தமிழ் எங்கும் ஓங்கட்டும்!'' என்று பாரதியார் கூறியதைக் கனீர் என்று சொல்லிச் ''சம்ஸ்கிருதத்தை எல்லாரும் படியுங்கள். அதனால் இந்தியைக் கற்கவும், காஷ்மீர்வரை அகில இந்தியாவும் உங்களுக்கு உரிமையாகவும் முடியும்'' என்றும் அவர் அறிவுறுத்தினார்.

## இடைத்தேர்தல்

அம்பன், செவ்வாய்

குடத்தனைக் கிராமசபையின் 11-ம் வட்டார அங்கத்தவர் பதவி துறந்ததைத் தொடர்ந்து இவ்வட்டாரத்திற்கு விரைவில் இடைத்தேர்தல் நடைபெறவிருக்கிறது.

**அரசங்க உத்தியோகத்தர்**

## அரசியலில் பங்கு கொள்ளலாம்

கோட்டை, செவ்

அரசாங்க ஊழியர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற நிர்வாக விதிகள் தளர்த்தப்பட்டுள்ளதுஎன பொதுநிர்வாகஉள்ளூராட்சி பொதுசேவை அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசி தெரிவித்துள்ளரர்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 4-ம் தி கதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org